4	ஊழியர் சேம நிதியத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத ரூபா 9,933,449,162 தொகை இலங்கை மத்திய வங்கியின் தொழில் ஆணையாளரின் பங்களிப்புக் கணக்கில் ரூபா 301,779,837 திணைக்களத்தின் ஊழிய சேம நிதியத்தின் வைப்புக் கணக்கிலும் திணைக்களத்தின் உப அலுவலகங்களிலும் வைப்புக் கணக்குகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை, விசேட புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த முறைப்பாடுகளில் 2021 செப்தெம்பர் மாதமளவில் 2015 முதல் 2020 வரையிலுமான ஆண்டுகளுக்குரிய 308 முறைப்பாடுகள் காணப்பட்டமையும் அவற்றுள் 57 சதவீதம்	2021 – 154 (6) 3.1 (அ)	அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணிய நிறைவேற்று வதற் குரிய பிரதான பணிகள் தொழில் அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள ங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்களுக் குரிய கொள்கைக ள், நிகழ்ச்சித் திட்ட உருவாக்கங் கள், நடைமுறைப் படுத்தல், பின்தொடர்த ல் மற்றும் மதிப்பீடு செய்தல் உரிய முறையில் நிறைவேற்றப்	“சீ” அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளின் அடிப்படையில் இப்பணம் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது டன் தீர்ப்பனவு செய்யும் போது பௌதீக பதிவேடுகள் பாரியளவில் பரிசோதனைக்கு உட்படுத்த நேரிடும். இலங்கை மத்திய வங்கியின் கணனி தரவு கட்டமைப்புடன் ஊழியர் சேமநிதியத்தின் அங்கத்தவர்கள் பற்றிய தகவல்களில் நிலவும் இணக்கமின்மையை தீர்ப்பனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவ துடன் அதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஒத்துழைப்பு அத்தியவசியமானத	முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிரு க்கவில்லை.

அல்லது 178 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிராமை, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயழிலந்து காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5,151 ஆக காணப்பட்டதுடன் அவற்றினை அறவிடுவதற்கு உரிய பெறுமதி ரூபா 3,108,693,249 ஆனமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் தொழில் அமைச்சின் பிரதான பணிகள் நிறைவேறியிருக்கவில்லை.

பட வேண்டியமை.

ாகும். பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தை விடுவிப்பதிலான செயல் முன்னேற்றமும் அதன் காலப்பகுப்பாய்வும் தொடர்ச்சியாக கண்காணிப்புக்கு உள்ளாக்கப் படுகின்றது. பல்வேறு நடைமுறைகளை தயாரித்து பழைமையான கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தொழில் திணைக்களத்திற்கு வழக்குகள், முறைப்பாடுகள் பாரியளவில் நாளாந்தம் கிடைத்தவாறுள்ள ஒரு நிறுவனமாகும். முறைப்பாடுகளுக்காக தீர்வுகளை வழங்குதல் இடம்பெறுகின்றது. திறந்த பிடியாணை வழங்கியிருந்தமை, பொறுப்புக் கூற வேண்டியவர்களின் முகவரிகளை விசாரித்தல் தொடர்பான பணிகள் அலுவலக மட்டத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் ஊடாக

				செயலிழந்த வழக்குகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
5	1934 இன் 19 ஆம் இலக்க தொழில்இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகங்களின் நோக்காக ‘‘இடருக்கு அல்லது மரணத்துக்கு உள்ளாகும் ஊழியர்களுக்காக தொழில் வழங்குனரிடமிருந்து நட்டஈட்டினை தாமதமின்றி அறவிடுவதன் மூலம் ஊழியர் திருப்தியை ஏற்படுத்துதல்’’ குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சேவையில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் உயிராபத்துமிக்க மற்றும் உயிராபத்தற்ற விபத்துக்கள் தொடர்பில் நட்டஈட்டினை அறவிடும் செயன்முறையில் அதிக தாமதம் ஏற்படுகின்றமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.	2021 – 154 (6) 3.1 (ஆ)	பிரதான பணிகளை நிறைவேற்றும் வகையில் செயற்படுவதற்கும் அப்பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் பின் தொடருவதற்கும் அமைச்சு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.	உயிராபத்துடைய அல்லது உயிராபத்தற்ற விபத்துக்கள் தொடர்பில் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் கோரிக்கை கிடைத்திருந்த போதிலும் அதற்கான வழக்கு கோவையொன்றை திறப்பதற்கு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முறையான விண்ணப்பமொன்று மற்றும் மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கமைய விண்ணப்பத்திலும் மருத்துவ அறிக்கையிலும் குறைபாடுகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றை திருத்தும் வரையிலும் ஆரம்ப பணிகளை தொடங்குவதில் தாமதம் ஏற்படக் கூடும். வழக்கு கோவையொன்றை திறந்து தொழில் தருனரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட வேண்டும். அதிகாரச்சட்டத்தின்	நட்ட ஈட்டு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதுடன் செயன்முறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

பிரகாரம் அவ்வறிக்கை சமர்ப்பிப்பதற்கு 30 நாள் கொண்ட காலம் வழங்கப்பட வேண்டும். அக்காலத்தின் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்காவிடின் அல்லது விபத்தினை மறுத்தால் தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். இங்கு விண்ணப்பதாரிகள் ஊனமுற்று காணப்பட்டால் ஒரு தடவையில் அல்லது வருகை தர முடியாது இருப்பின் வழக்கினை தள்ளுபடி செய்யாது அவருக்கு உரிய உரிமையினை நிறைவேற்றும் பொருட்டு பல தடவைகளில் நாட்கள் வழங்கப்படும். தொழில்தருனர் முதலாவது திகதியிலேயே பெரும்பாலும் நீதிமன்றத்திற்கு வருகை தராததுடன் அவர்களை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்கு பதிவுத் தபால், பொலிசின் மூலம், கிராம சேவகரின் மூலம் நொத்தாரிசுகளை கையளிப்பதற்கு

					நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலமும் தாமதங்கள் ஏற்படலாம்.	
6	அம்பாறை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியில் சாரதிகளுக்காக தங்குமிடமொன்று (Driver's Lodge) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2021 ஆகஸ்ட் மாதம் ரூபா 5,095,983 பெறுமதிக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய முற்பணத்தின் பெறுமதி 20% வேண்டிய போதிலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறும் வகையில் 2021 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 1,149,855 தொகையும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 3,617,753 தொகையுமாக (நிறுத்தி வைக்கப்பட்ட பணம்) கழிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதிக்கு முற்பணமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2022 சனவரி மாதம் நிறைவு செய்யப்பட	2021 – 154 (6) 3.4	பணிகளுக்கான முற்பணத்தை செலுத்தும் போது பெறுகைகளுக்கான வழிகாட்டி கோவைகளின் பிரகாரமும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரமும் செயற்பட வேண்டும்.	அம்பாறை சுற்றுலா விடுதியில அமைந்துள்ள காணியில் சாரதிகளுக்கான தங்குமிட வசதியினை நிர்மாணிக்கும் பணிகளில் 65 சதவீதமான அளவு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2022 சனவரி மாதமளவில் முழுமையாக நிர்மாணங்கள் நிறைவு செய்வதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கியிருந்தார். எனினும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கான காலம் 2022 ஆம் ஆண்டில் மே மாதம் வரையிலும் நீடிப்புச் செய்வதாக ஒப்பந்தக்காரர் கோரியிருந்ததுடன் அமைச்சின் மூலம் நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த ஒப்பந்தக்காரரினால்	தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை.

	வேண்டியதாக காணப்பட்ட இந்த ஒப்பந்தம் 2022 மே 25 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.			2022 மே 31 ஆந் திகதியளவில் அம்பாறை சுற்றுலா விடுதியில் இந்த நிர்மாணங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு எமது அமைச்சிற்கு பொறுப்பேற்குமாறு வாய்மொழி மூலம் கோரியிருந்ததுடன் தொழில் திணைக்களத்தின் சிவில் பொறியியலாளரினால் நிர்மாணங்களின் தரம் தொடர்பிலான களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது.	
7	தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் பதவியணி சம்பளத்தை தயாரிக்கும் போது சம்பளப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளரினால் சம்பள மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் 2022 சனவரி 11 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த சம்பள மோசடி 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2020 திசெம்பர் மாதம் வரை இடம்பெற்றிருந்ததுடன் அண்ணளவான அதன்	2021 – 154 (6) 3.5 (ஆ) 2023 – 154 (6) 2.2 (அ)	தாபன விதிக் கோவையின் விடயம் II பகுதிக்கமைய செயற்பட வேண்டும்.	தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் பதவியணியக்காக சம்பளத்தை செலுத்தும் போது பண மோசடிகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டது 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலேயே என்பதால் 2021 ஆம் ஆண்டில் நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை. தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் ஒட்டுமொத்த	நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையவில்லை. ரூபா 1,665,178 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக உள்ளது.

				பெறுமதி ரூபா 5,331,520 ஆகும். அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் இடம்பெற்றிராததுடன் 5 ½ மாதங்கள் கடந்திருந்த போதிலும் ஆரம்ப விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	நடைமுறையையும் விசாரணைக்கு உட்படுத்தி குழுவொன்றின் மூலம் மொத்த நட்டம் ரூபா 5,133,520 இற்கு அண்மைய தொகை இனங்காணப்பட்டுள்ளதுடன் அறிக்கை தயாரிக்கப்பட்டவாறு காணப்படுகின்றது. எவ்வாறான போதிலும் இது தொடர்பில் குறித்த உத்தியோகத்தர் பணி நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு வெளிநாட்டு பயணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதுடன் மோசடி செய்யப்பட்டுள்ள தொகையில் ஒரு தொகை அறவிடப்பட்டுள்ளது
8	1934 இன் 19 ஆம் இலக்க தொழில் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் XII பிரிவில் 57(1) பிரிவிற்கமைய ஊழியர் ஒருவருக்கு சேவையில் ஈடுபட்டுள்ள போது விபத்தொன்று ஏற்பட்டு 14 நாட்களுக்கு தொழில்தருனரால் தொழில் ஆணையாளருக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட	2021 – 154 (6) 3.7 (ஆ)	குறித்த அதிகாரச் சட்டத்தை திருத்தியமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு முறையான நடைமுறை யொன்றினை தயாரிப்பதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்	விபத்து ஏற்பட்டு 14 நாட்களினுள் தொழில் தருனரால் தொழில் இழப்பீட்டு ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் அதற்கான நடவடிக்கை எடுப்பதெனில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடர வேண்டியதுடன்	தற்போது வரையிலும் இலகு வழிமுறை அல்லது வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

	வேண்டிய போதிலும் இதுதொடர்பாக எதுவித நடவடிக்கையும் தயாரிக்கப்படாமையால் தொழில் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த விபத்துக்கள் 5 மாதங்கள் முதல் 12 வருடங்கள் வரை தாமதடைந்து கிடைத்திருந்தமை பதிவேடுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.		தர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அது நடைமுறையில் சிரமமான செயற்பாடொன்றாகும். அந்நடைமுறையை மேற்கொள்வதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றும் நிறுவனத்தில் இதுவரையிலும் காணப்படவில்லை.	
9	தொழில் அமைச்சில் பௌதீக ரீதியாக காணப்படாத போதிலும் தொழில் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 8 வாகனங்களில் ஒரு வாகனம் அவசர விபத்தொன்றின் பிரகாரம் அகற்றப்பட வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாகனத்திற்காக 2021 ஆம் ஆண்டிடின் போது புதிய வருமான அனுமதிப் பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுவதாகவும் ஏனைய 7 வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்	2021 – 154 (6) 3.7 (இ)	இவ்வாகனங்கள் தொடர்பில் துரிதமாக தகவல்களை பெற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இதுவரையிலும் இந்த அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இந்த 08 வாகனங்கள் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. அத்தகவல்களுக்கமைய ஒரு வாகனம் செயலாளர், தொழில் மற்றும் தொழில்சார் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய 07 வாகனங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களை கோரி இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார	இதுவரையிலும் சுவீகரித்தல் இடம்பெறவில்லை.

கொண்டு குறித்த நிறுவனத்திற்கு சுவீகரித்தல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

சபை, திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கற்கைகள், ஆராய்ச்சி புத்தாக்க இராஜாங்க அமைச்சில் அல்லது ஏனைய இணைந்த நிறுவனமொன்றிடம் காணப்படின் அத்தகவல்களை இந்த அமைச்சிற்கு அறிவிக்குமாறு கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கற்கைகள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றான மூன்றாம் நிலை மற்றும் தொலைக்கல்வி ஆணைக்குழுவிற்கு சொந்தமாக ஒரு வாகனம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாகனத்தை உரிய முறையில் சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. ஏனைய 06 வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டதன் பின்னர்

				வாகனங்கள் காணப்படும் இடங்களை இனங்கண்டு உரிய நிறுவங்களுக்கு சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்பது.	
10	சிறந்த தொழில் சூழலொன்றுக்காக தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தல் (சுனிசி மெஹவர) வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 45,000,000 ஆன நிதியேற்பாட்டினை பயன்படுத்தி ஏனைய 03 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 11,856,138 தொகையில் 2021 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாத பணிகளுக்காக ரூபா 3,028,506 எனுமாறு ரூபா 14,884,644 செலவிடப்பட்டிருந்தது.	2021 – 154 (6) 3.7 (ஈ)	சுனிசி மெஹிவர நிதியேற்பாடு அந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்காக மாத்திரம் பயன்படுத்தப் பட வேண்டும்.	சுனிசி மெஹிவர நிகழ்ச்சித் திட்டத்தின் முழுமையான, ஆக்கபூர்வமான மற்றும் நல்ல வேலைவாய்ப்புக்க ளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சுனிசி வேலைவாய்ப்பு மற்றும் மேம்படுத்தல் மற்றும் தேசிய உற்பத்தி திறன், வேலைத்தளத்தின் உரித்து, சமூக பாதுகாப்பு, சமூக ஆற்றல்களை மேம்படுத்துவதற்கா க தொழில்அமைச்சிற் கு இணைந்த நிறுவனங்களுக்கும் பொருத்தமான சூழலொன்று நிலவுவது அத்தியாவசியமான தாகும். அதனால் தொழில் அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கா க சிறந்த வேலைவாய்ப்புக்க	நிதியேற்பாடு பயன்படுத்தல் சரி செய்யப்படவில்லை.

				ளை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சூழலொன்றை உருவாக்குவதற்காக இந்நிதியேற்பாடு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.	
11	அம்பாறை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி 2022 மே மாதம் வரையிலும் தொழில் அமைச்சிற்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 – 154 (6) 3.7 (எ)	நிறுவனத்திற்கு உரித்தற்ற காணிகளில் நிர்மாணங்களை மேற்கொள்ளக் கூடாததுடன் சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளமையால் காணியை சுவீகரித்தல் துரிதப்படுத்தப்பட வேண்டியமை.	இது தொடர்பில் தொடர்ச்சியாக வளப் பாதுகாப்பு அமைச்சிற்கும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வளப் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) இனால் இந்த காணியின் ஒரு பகுதி அம்பாறையில் பாதுகாக்கப்பட்ட இடத்திலிருந்து அகற்றுவதற்குரிய பணிகள் இடம்பெற்றவாறு உள்ளதாகவும் அந்த செயன்முறையில் இறுதியில் இந்தக் காணியின் ஒரு பகுதி தொழில் அமைச்சிற்கு சாட்ட முடியும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.	வர்த்தமானி அறிவித்தல் மூலம் அம்பாறை சரணாலயத்தில் இருந்து அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிறைவடையவில்லை.
12	2021 நவம்பர் 30 ஆந் திகதியளவில் தொழில் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு	2021 – 154 (6) 4.1 (அ)	இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களின்	உயிராபத்துடைய அல்லது உயிராபத்தற்ற விபத்துக்கள் தொழில் நட்ட	நலன்களை வழங்கும் வழிமுறைகளில் மாற்றம் மேற்கொள்ளப்பட

அறிக்கையிடப்பட்டிருந்த விபத்துக்களிடையே உயிராபத்துள்ள 140 விபத்துக்கள் மற்றும் உயிராபத்தற்ற 424 விபத்துக்களுக்காக நட்ட ஈட்டினை அறவிடும் நடைமுறை நிறைவு செய்யப்பட்டிராததுடன் விபத்து அறிக்கையிடப்பட்டு 5 வருடங்களை கடந்த உயிராபத்துமிக்க 14 விபத்துக்கள் மற்றும் உயிராபத்தற்ற 29 விபத்துக்களும் இதனுள் உள்ளடங்கியிருந்தது.

பிரகாரம் செயற்பட்டு குறித்த பணத்தை துரிதமாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை.

ஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு கோரிக்கை கிடைக்கும் போது அதற்காக வழக்கு கோவையொன்று திறத்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முறையான விண்ணப்பம் மற்றும் மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அதற்கமைய விண்ணப்பத்தின் மற்றும் மருத்துவ அறிக்கையில் குறைபாடுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் வரையிலும் ஆரம்ப நடவடிக்கைகளை தொடங்குவதில் தாமதம் ஏற்படக் கூடும். ஆதன் பின்னர் வழக்கு கோவை திறக்கப்பட்டு தொழில் வழங்குனரிடமிருந்து அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 30 நாட்கள் வரையான காலம் வழங்கப்பட வேண்டும். அக்காலத்தின் பின்னர் அறிக்கையை சமர்ப்பிக்காவிடின் அல்லது விபத்தினை மறுப்பாரெனின்

வில்லை.

				தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படும். தொழில் இழப்பீட்டு நீதிமன்ற செயல்முறைகள் சிவில் வழக்கு நிறைவேற்றுக் கோவை, குற்றவியல் வழக்கு நிறைவேற்றுக் கோவை மற்றும் சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைமுறைக்கமைய செயற்படுத்தப்பட வேண்டும்.	
13	தொழில் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரின் 2021 மார்ச் 22 ஆந் திகதி அறிக்கையின் பிரகாரம் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 5 வருடங்களை கடந்த 10 கோவைகளை பரீட்சித்த போது 03 முதல் 09 வருடங்கள் வரையான காலம் முழுவதும் 13 முதல் 52 தடவைகள் வழக்குகளின் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் 2021 சனவரி வரையிலும் தீர்ப்பொன்று கிடைத்திராதமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய	2021 – 154 (6) 4.1 (ஆ)	இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு குறித்த பணத்தை துரிதமாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை.	இதன் கீழ் குறிப்பிடப்பட்டள்ள அனைத்து வழக்கு கோவைகளும் தொழில் இழப்பீட்டு நீதிமன்றங்களில் தற்போது விசாரணையில் உள்ள வழக்குகளாகும். இந்த நீதிமன்றங்களில் மாவட்ட நீதிமன்றத்தில் தன்மையிலான வழக்குகள் விசாரிக்கப்படுவதுடன் இரு தரப்பினருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கமைய வழக்கொன்றுக்காக எடுக்கப்படும் காலத்தை	நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்கும் நீதிமன்ற வழிமுறைகளில் மாற்றம் மேற்கொள்ளப்பட வில்லை.

	இழப்பீட்டு விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து இழப்பீட்டினை பெற்றுக் கொள்ள அதிக காலம் கடப்பதனால் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகையில் பெற்றுக் கொள்ளக் கூடிய நலனும் அவர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியாமையால் இழப்பீட்டினை வழங்கும் நடைமுறையில் அதிக தாமதம் ஏற்படுவதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்து அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.			திட்டவட்டமாக தெரிவிப்பதற்கு இயலுமையொன்று காணப்படவில்லை. அவ்வாறே சரியான நீதிமன்ற நடவடிக்கைகளின் பிரகாரம் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளாமையால் தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தில் தீர்ப்பினை உச்ச நீதிமன்றத்தில் திருத்தியமைப்பதற்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.	
14	தொழில் இழப்பீடு நீதிமன்றத்தில் தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட 13 கோவைகளுக்குரிய தொழில்தருனர்களால் இழப்பீட்டு அலுவலகத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,947,535 தொகைக்காக சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன் அவற்றுள் ரூபா 3,729,505 ஆன சேமிப்பு வைப்புக் கணக்குகள் 10 ஆரம்பிக்கப்பட்டு 1 முதல் 4 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடநதிருந்தது.	2021 – 154 (6) 4.1 (இ)	இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு குறித்த பணத்தை துரிதமாக நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை.	மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு கோவைகள் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் கட்டளையை வழங்கும் வரையில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது.	விடுவித்தல் மேற்கொள்ளப்படவில்லை.

15	தொழிலில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் உயிராபத்து மிக்க விபத்துக்கள் காரணமாக மரணமடையும் ஊழியர்களின் சிறுவயதுடைய குழந்தைகளுக்கு உரித்தான இழப்பீட்டு பணம் அவர்களின் வயது பூர்த்தியடையும் வரையிலும் தேசிய சேமிப்பு வங்கியில் இழப்பீட்டு ஆணையாளர் பெயரில் உள்ள நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டு குறித்த வயதை அடைந்த பின்னர் அவர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் காணப்பட்ட அவ்வாறு வயதினை பூர்த்தியடைந்த விடுவிக்கப்படாத நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 6,100,788 ஆகும்.	2021 – 154 (6) 4.1 (ஈ)	இழப்பீட்டு பணத்தை துரிதமாக விடுவிப்பதற் கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை .	2022 யூன் 08 ஆந் திகதி அளவிலும் நிலவிய மீதி ரூபா 1,075,000 ஆகும்.	விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
16	இழப்பீட்டிற்கு உள்ளான தரப்பினருக்கு உரித்துடையதாக இழப்பீட்டு நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட வேண்டிய வழக்கு கட்டளைகளின் பிரகாரம் தொழில் தருனர் இழப்பீட்டு	2021 – 154 (6) 4.1 (உ)	இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்க ளுக்கு அமைய செயற்பட்டு உரிய நலனாளிகளு க்கு துரிதமாக	தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இழப்பீட்டு தொகையை செலுத்தாத சந்தர்ப்பத்தில் வழக்கு தொடரப்பட்டவரின் அசையும்	வழிமுறைகளில் மாற்றம் மேற்கொள்ளப்பட வில்லை.

தொகையை செலுத்தாத காரணத்தினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 46 வழக்குகளின் பிடியாணைகளாக காணப்பட்டதுடன் அவற்றிலிருந்து உரித்தாக வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 13,419,197 ஆகும்.

இவற்றிற்கிடையே பிடியாணை வெளியிடப்பட்டு 10 வருடங்களை விஞ்சிய 10 வழக்குகளுக்குரிய ரூபா 1,873,352 தொகையும் 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட 21 வழக்குகளுக்குரிய ரூபா 6,917,546 தொகை மற்றும் 1-4 வருடங்களுக்கு இடைப்பட்ட 15 வழக்குகளுக்குரிய ரூபா 4,628,298 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

இந்த விதத்தில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இழப்பீட்டு பெறுனருக்கு இத்தொகை கிடைக்காத காரணத்தினால் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆதனங்களை தடைக்குள்ளாக்கி அறவிடும் நடைமுறை குறித்த நீதவான நீதிமன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்காக இழப்பீட்டிற்கு உள்ளான தரப்பினர் முன்வர வேண்டியதுடன் அவர்கள் அதற்கான ஒத்துழைப்பினை வழங்காமையின் அடிப்படையில் இப்பணத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமையை தீர்ப்பதற்கு நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்திற்கு பதிவாளர் ஒருவரை நியமிப்பதற்கும் வழக்கு தொடரப்பட்டவர்களுக்கு உரித்துடைய அசையாத சொத்துக்களை தடை செய்யக்கூடிய வகையில் அதிகாரச் சட்டத்திற்கு திருத்தங்களை உள்ளடக்கியுள்ளமையால் எதிர்காலத்தில் இந்த பிரச்சினையை

				தீர்ப்பதற்கு இயலுமாக இருக்கும்.	
17	2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஊழியர் நலன்புரி நிதியத்தின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத ரூபா 282,726,669 தொகையும், தொழில் ஆணையாளரின் பங்களிப்பு கணக்கில் ரூபா 57,174 தொகையுமாக தொழில் திணைக்களத்தின் உப அலுவலகங்களின் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	2022 – 154 (6) 3.1 (அ) (i)	பங்களிப்பு பணத்தை தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	உரிமையாளரின் கணக்குகளில் தீர்ப்பனவு செய்வதற்கரிய பணிகளை மேற்கொள்ளும் போது சட்ட ஆவணங்களை பாரிய அளவில் பரிசோதிப்பதற்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. இந்த நிதியங்கள் நெடுங்காலமாக முன்கொண்டுவரப்படும் மீதிகள் என்பதால் தீர்ப்பனவு செய்ய சில காலம் எடுக்கும். திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தனிப்பட்ட கணக்குகளுக்கு பணத்தை செலவு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கதற்கு உத்தியோகத்தர்களுக்க அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	வழிமுறைகளை இலகு மற்றும் துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
18	2022 ஆம் ஆண்டளவில் தனிப்பட்ட நலன்புரி நிதியம் தொடர்பில் உரிய கண்காணிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.	2022 – 154 (6) 3.1 (அ) (ii)	தனியார் ஊழியர் நலன்புரி நிதியங்களை கண்காணிப்பதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	தற்போது தனியார் ஊழியர் நலன்புரி நிதியத்தினை பேணும் பெரும்பாலான நிறுவனங்கள் ஊழியர் நலன்புரிய நிதிய அதிகாரச்சட்டம் ஆரம்பிப்பதற்கு	சட்டம் திருத்தப்படவில்லை.

				முன்னர் நிலவிய நிறுவனங்கள் ஆனமையால் தனியார் ஊழியர் நலன்புரி நிதியங்களை கண்காணிக்கும் பொறிமுறையை மிகவும் வலுவூட்டுவதற்கு அதற்குரிய சட்டத்தின் பிரிவுகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது இனங்காணப்பட்டுள்ளது.	
19	வேலைவாய்ப்புக்காக ஒழுங்குபடுத்தலுக்கான தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையொன்று 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.	2022 – 154 (6) 3.1 (அ) (iii)	மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.	இந்த கொள்கைகள் உருவாக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்துள்ளமையால் அதனை திருத்தியமைத்து நடைமுறைப்படுத்துவதற்குரிய பிரிவுகளை தொடர்புபடுத்தி தருமாறு பொது நிர்வாக அமைச்சிடமும், மனிதவள அபிவிருத்தியின் போது இலங்கை தேசிய மன்றத்தின் (NHRDC) உள்ளடங்களாக உரிய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை சிறந்த பதில்கள் கிடைக்கவில்லை.	கொள்கைகள் உருவாக்கப்பட்டு இருந்த போதிலும் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் இடம்பெறிருக்கவில்லை.
20	2020 ஆம் ஆண்டில்	2022 –	பரிவர்த்தனை	தற்போதுள்ள	குறைபாடுகள்

	தேசிய உற்பத்தித்திறன் விருதுகளை வென்றவர்களுக்கு வழங்குவதற்காக 685 விருதுகளுக்காக ரூபா 4,512,123 செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022 யூன் 15 ஆந் திகதி அன்று விருதுகள் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. விருதுகளை ஏற்றுக்கொண்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, இவை சரியான விவரக்குறிப்புகள் உள்ளதா என்று ஒரு அறிக்கை கோரப்பட்டது. மேலும் 2022 செப்தம்பர் 21 ஆந் திகதியிட்ட கடிதத்தின் NPS/PR/06/001 இன் படி, 33 விருது அலகுகளைத் தவிர, மீதமுள்ளவை குறைபாடுள்ளவை என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு உள்ள போது அந்த கேடயங்கள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	154 (6) 3.5 (அ)	கள் மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள முறையில் மேற்கொள்ள ப்பட வேண்டும்.	சூழ்நிலையை சரிசெய்வதில் உள்ள சிரமம் கருதி, சிறிது தாமதம் ஏற்பட்டாலும், விருதுகள் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் 1 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டு, தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது.	தொடர்பில் வேறு வழிமுறை மேற்கொள்ளப்பட வில்லை.
21	2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப செலவினமாக ரூபா 1,465,200 செலவிடப்பட்டு மாதாந்தம் ரூபா 25,000 படியாக பராமரிப்ப செலவினம் ரூபா 1,700,000	2022 – 154 (6) 3.6 (அ) 2023 – 154 (6) 3.4 (அ)	கட்டமைப்பை திறமையாக வும் செயற்திறனா கவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இந்த கட்டமைப்பை மேலும் பயன்படுத்தாமல் பராமரிப்பதற்குப் பதிலாக, கணினியின் முந்தைய தரவுகள் அனைத்தையும் காப்புப் பிரதி (backup)	முழுமையான செயற்திறனுடன் கட்டமைப்பு பாவனைக்குட்படு த்தல் இடம்பெறவில்லை .

	தொகையம், ஏனைய செலவினங்களுக்காக ரூபா 133,800 தொகையும் செலவிடப்பட்டு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 4,299,000 கூட்டுப் பெறுமதியுடைய e-breeze செயற்திட்டம் உற்பத்தித் திறன் விருது வழங்கும் விழாவின் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஏனைய எதிர்பார்த்த பணிகளான ஏனைய பணிகளான விழா முகாமைத்துவம் மற்றும் கற்கைகள் முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் நிர்வாகப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.			எடுக்கவும், அதை சரியாகப் பயன்படுத்துவதற்கு புதிய பதிப்பாக (version) கணினியை நிறுவவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கிணங்க, e-breeze கட்டமைப்பில் இதுவரை நிலவிய குறைப்பயன்பாட்டு நிலைமை அல்லாது, மிகவும் சிறந்த பயன்பாட்டின் ஊடாக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அதிகபட்ச கடமைச் செயல்திறனுக்காகப் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பது.	
22	2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உற்பத்தித்திறன் செயலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த 639 உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக உரிய முறையிலான கடமை கையளிப்பொன்றோ தலைமை அலுவலகத்தின் முறையான கண்காணிப்போ இடம்பெற்றிருக்கவில்லை.	2022 – 154 (6) 3.6 (அ)	உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு மற்றும் பணி ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.	சம்பள அதிகரிப்புகளை வழங்குவதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பில் கணினி சமர்ப்பிப்பு ஒன்று பரீட்சிக்கப்படுகின்றது. பதவியணி மீளாய்வு வேலைத்திட்டமொன்றுக்காக உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது.	கண்காணிப்பிற்கு ஒழுங்கான ஒரு முறைமை உருவாக்கப்பட்டிருக்கவில்லை.
23	அமைச்சின் பிரதான பணியொன்றாக				

	குறிப்பிடப்பட்டிருந்த தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகள் மற்றும் ஊழியர் நலன்புரி நிதியத்தினை நிர்வகித்தல் ஆகிய பணிகள் உரிய முறையில் நிறைவேறியிருக்கவில்லை என்பது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் அவதானிக்கப்பட்டது.					
(அ)	இலங்கையின் தேசிய மனிதவளம் மற்றும் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.	2023 – 154 (6) 3.1 (அ) (i)	நோக்கம் மற்றும் பொறுப்புகள நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு தொடர்பான இலங்கை தேசிய கொள்கை மற்றும் செயலநடவடிக்கைத் திட்டம் 2023.09.12 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு 2023.10.25 ஆந் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. தேசியக் கொள்கையை செயல்படுத்துவதற்கான தேசிய அளவிலான கண்காணிப்பு பொறிமுறையான வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வுகள் தொடர்பான தேசிய	தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறிமுறை உருவாக்கப்படவில்லை.

				ஆலோசனைக் குழு நிறுவப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	
(ஆ)	தனியார் சேமலாப நிதியத்தினை நிர்வகிப்பதற்கான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவுகள் மற்றும் பிரமாணங்களின் திருத்தம்.	2023 – 154 (6) 3.1 (அ) (ii)	நிதியத்தின் நிர்வாகத்திற்கு தேவையான சட்டங்கள் மற்றும் விதிகள் வகுக்கப்பட வேண்டும்.	சட்டத்தின் திருத்தத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அதன் மூலம் விதிகளை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இது சட்டத்தின் பிரிவுகள் மற்றும் ஒழுங்குமுறைகளை திருத்துவதற்கும், வழக்குகளை தாக்கல் செய்யும் செயல்முறையை சீரமைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.	சட்டத் திருத்தம் முடிவடையவில்லை.
(இ)	வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு தீவுக்குத் திரும்பும் மக்கள் தொழில் தொடங்குவதற்காக சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.	2023 – 154 (6) 3.1 (அ) (iii)	முறையான வேலைத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட வேண்டும்.	வெளிநாட்டு வேலை வாய்ப்பை முடித்துவிட்டு இலங்கைக்கு திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொழில் தொடங்குவதற்காக பல்நோக்கு கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.	போதியளவிலான வகையில் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

						வெளிநாட்டிற்குச் செல்வதற்குள்ள விசேட கவனம் தேவைப்படும் அடையாளம் காணப்பட்ட குடும்ப அலகுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு (IOM) மற்றும் ஹெல்விடாஸ் இலங்கை நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில், எமது அமைச்சின் ஒருங்கிணைப்புடன், தென் மாகாணத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மீள் ஒருங்கிணைப்புக்கு பங்களிக்கும் கள உத்தியோகத்தர்களுக்கான தொழில்முயற்சி மேம்பாடு மற்றும் நிதி கல்வியறிவு குறித்த பயிற்சித் திட்டம், ஒரு முன்னோடித் திட்டமாக, தென் மாகாணத்திலுள்ள 29 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வணிகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
(ஈ)	1985 இன் 21 ஆம் இலக்க	2023 வெறிநாட்டு	– 154	காலத்தின் (6)	தேவைக்கேற்	2023.04.24 திகதி	ஆந் முதல் சட்டத் திருத்தம் முடிவடையவில்லை

	வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் திருத்தங்கள்	3.1 (iv)	(அ)	ப கட்டளைச் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.	முறையாக சட்டத் திருத்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தால் அடிப்படை வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படை வரைபை அவ்வப்போது திருத்திய பின், இறுதியாக 2024.05.14 ஆந் திகதி திருத்தங்கள் மீதான விவாதம் நடைபெற்றது. இறுதி வரைபுக்கு சட்டமா அதிபரின் அனுமதி அறிக்கையை வழங்கியதன் பின்னர் மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று பாராளுமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்க முடியும்.	ல.
(உ)	தற்கால தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல். (Unified Labour Law Reforms)	2023 – 154 (6) 3.1 (v)	(அ)	உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.	தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்த இந்த அமைச்சினை வழிநடத்துவதன் மூலம் தொழிற்சங்கங்கள், தொழில்வழங்குநர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ள தரப்பினரிடையே 7 சுற்று விவாதங்களை நடாத்தி	கடமைப் பொறுப்புகள் முடிவடையவில்லை.

					கருத்துகளைப் பெற்ற பின்னர், தற்போதுள்ள 13 சட்டங்களைத் திருத்துவதற்கும், மற்றும் தற்போதைய தொழில் உலகிற்கு பொருந்தும் வகையில் புதிய விடயங்களை உள்ளடக்கிய வேலைவாய்ப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்கும் 2023.08.07 ஆந் திகதிய அமைச்சர்கள் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. ஒரு குழுவால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க சட்ட வரைபு சட்ட வரையுநர் திணைக்களத்தால் கண்காணிக்கப்படுகிறது. இறுதி வரைபு கிடைத்தவுடன், அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்று பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க முடியாது என்பது.	
24	பணிபுரியும் போது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்தாலும், சம்பந்தப்பட்ட உத்தரவின்படி தொழில்தருநர் இழப்பீடு வழங்காததால், 2023	2023 (6) (இ)	-154 3.2	பேரிடர்களால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் செயல்முறை நெறிப்படுத்தப்பட்டு செயற்திறனானதாக	தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் பிரதிவாதியின் சொத்துக்களை பறிமுதல் செய்ய, தொழில் இழப்பீட்டு கட்டளைச்	இழப்பீட்டு செயல்முறையில் மாற்றம் இடம்பெறவில்லை. இன்னமும் செலுத்தப்படாத இழப்பீட்டுத் தொகை ரூபா. 12,344,117 ஆகும்.

திசெம்பர் 31 வரை, 54 வழக்குகள் காரணமாக ஊழியர்களுக்கு வழங்கப்படாத இழப்பீட்டுத் தொகை ரூபா 12,344,117 ஆகும். இதேவேளை, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 வருடங்களைத் தாண்டிய 11 வழக்குகளும், 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட 22 வழக்குகளும், 1-4 வருடங்களுக்கு இடையில் 11 வழக்குகளும் பதிவாகியுள்ளன.

இருக்க வேண்டும்.

சட்டத்தின் பிராகரம் பிடியாணை பிறப்பிக்கப்படும். அந்த பிடியாணையை செயற்படுத்தும் அதிகாரமானது பிரதிவாதி வசிக்கும் பகுதியில் உள்ள நீதவான் நீதிமன்றத்திற்கு ஆகும். தொழில் இழப்பீட்டு ஆணையாளர் நீதவான் அதிகாரத்திற்கு அமைவாக தொழில் இழப்பீட்டு ஆணையாளர் வழங்கிய தீர்ப்பாக கருதி அதனை நடைமுறைப்படுத்தல் உரிய நீதிமன்றத்தின் பதிவாளரால் மேற்கொள்ளப்படும். அதற்கேற்ப, கோரிய தரப்பினர் முன் வந்து, நீதவான் நீதிமன்றத்தின் நிதி அதிகாரிகளுக்கு ஆதரவை வழங்க வேண்டும் நீதிமன்றத்தின் மூலம் எதிர்மனுதாரரின் சொத்தை காட்டவும், தடை செய்யப்பட்ட சொத்துக்களை ஏலம் விடவும், இழப்பீடு வசூலிக்கவும் விண்ணப்பதாரர்கள் முன்வராத காரணத்தால், அந்த 54 பிடியாணை

				வழக்குகள் தொடர்பான இழப்பீடு தொகையை வசூலிக்க முடியாதுள்ளது.	
25	மஹியங்கனை மற்றும் தெல்தெனிய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை விநியோகிக்கும் செயற்திட்டத்திற்கு 90,000 அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்தத் செயற்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 63,000 முற்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன்,மேலும் மற்றொரு செயற்திட்டத்திற்காக (உரம் செயற்திட்டம்) பெறப்பட்ட ஐ.அ.டொலர் 27,000 செயற்திட்டத்தை நிறைவு செய்ய செலவிடப்பட்டது. மருத்துவ உபகரண விநியோகத் செயற்திட்டம் 2023 ஏப்ரல் மாத்தில் நிறைவடைந்தாலும், பணத்தை மீளளிப்பு செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இந்தத் தொகையை திருப்பிச் செலுத்த முடியவில்லை. தேவையான பெறுகை நடவடிக்கைகளின்	2023 – 154 (6) 3.3 (அ)	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை.	ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் நன்கொடையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மஹியங்கனை மற்றும் தெல்தெனிய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை விநியோகிப்பதற்காக ஏனைய செயற்திட்டங்களினால் செலவிடப்பட்ட ஐ.அ.டொலர் 27,000 அரச கணக்கு சுற்றறிக்கையின் அடிப்படையில் தற்போது ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பினால் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டுள்ளது.	ஐ.அ.டொலர் 2,221 செலவினை அறவிட முடியவில்லை.

	துரிதமாக ஏற்பாடு செய்யப்படாமையால் முதலில் திட்டமிடப்பட்ட இரண்டு பொருட்களை கொள்வனவு செய்ய முடியவில்லை, மேலும் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அந்நிய செலாவணி விகிதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் சூழ்நிலையில், ஐ.அ.டொலர் 2,221 அங்கீகரிக்கப்பட்ட உதவித் தொகையை விட அதிகமாகச் செலுத்த நேர்ந்திருந்தது.				
26	உற்பத்தித் திறன் செயலகம் நடாத்திச் செல்லப்படும் செத்சிறிபாய இரண்டாம் கட்டம், 10 வது மாடி வளாகத்திற்கான 2023 ஜனவரி முதல் 2025 ஜனவரி வரையிலான காலகட்டத்திற்காக வாடகை மற்றும் சேவைக் கட்டணங்கள் ஒரு சதுர அடிக்கான கிரயம் 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், இதற்காக நிறுவனம் ஒரு தனியார் கம்பனியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல், மாத வாடகை ரூபா 3,548,342 ஆக காணப்படுவதுடன், வருடாந்த கத்தகை வாடகைப் பெறுமதி ரூபா 30,578,901 ஆகும். மேற்படி	2023 – 154 (6) 3.4 (ஆ)	செலவுகள் குறையும் வகையில் செயற்பட வேண்டும்.	2024.04.30 ஆந் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலைமையில் அமைச்சின் பிரதான உற்பத்திப் பகுதிகளின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கூட்டத்தில், தொழிலாளர் தலைமைச் செயலக கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்ப்புக்குப் பின்னர் தேசிய உற்பத்தித் திறன் செயலக அலுவலகத்தை அந்த வளாகத்திற்கு கொண்டு செல்வது குறித்து	செயல்முறை முடிவடையவில்லை.

	குத்தகைப் பணத்தை குறைப்பதற்காக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான இடத்திலிருந்து ஒரு வளாகத்தினை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.			ஆலோசிக்கப்பட்டது .	
27	தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் இழப்பீட்டுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி, விபத்தின் தன்மை, அழைப்பு விடுக்கப்பட்ட திகதி, வழக்கு திகதி, இழப்பீட்டுத் தொகை வைப்புச் செய்தல் போன்ற நிர்வாகத் தகவல்கள் கணினி கட்டமைப்பில் சேர்க்கப்படாததால், தகவல் சரிபார்ப்புக்காக கோப்புகள் மற்றும் ஆவணங்கள் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட வேண்டும். இதனால், கோப்புகளின் தகவல்களை விரைவாகப் பெறுவதில் சிரமம் ஏற்படுவதுடன், ஒரு கோவை தொலைந்துபோனால் தகவல்களைப் பெற முடியாமல் போகும் அபாயம் நிலவுகின்றது.	2023 – 154 (6) 3.5	தகவல்களை கணினிமயமாக்கி, நிர்வாக பணிகளை எளிதாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அனைத்து இழப்பீடு நீதிமன்றங்களுக்கு உரியதாக தனித்தனி பதிவேடுகள் நாளதுவரையாக பராமரிக்கப்படுகின்றன.	கணினி ஒழுங்கனைப்பு உருவாக்கப்படவில்லை.

28	2005 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டுத் திருத்தச் சட்டத்தின் பகுதி IV இன் பிரிவு 13(1) இன் படி, இழப்பீட்டு ஆணையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகை, அதற்குரிய நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பகிர்ந்தளிக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 4,689,859 ஆகும்.	2023 – 154 (6) 4.1	பாதிக்கப்பட்ட தொழிலாளர் களுக்கு உரித்தான நலன்களை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இழப்பீட்டுத் தொகை ஆணையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட போதிலும், இதுவரை பகிர்ந்தளிக்கப்படா து பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழப்பீட்டு தொகை ரூபா 3,074,493 ஆகும். இந்த தொகையில், 04 கோவைகளுக்கு உரியதாக வைப்புச் செய்யப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய ரூபா 1,55,996 தொகை காணப்பட்டது.	இன்னமும் பொது வைப்புக் கணக்கில் ரூபா. 3,074,942 இழப்பீட்டுத் தொகை உள்ளது.

3.5 சுகாதார அமைச்சு

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புகள் ரூபா	மூலதனம் ரூபா	மிகை (பற்றாக்குறை) ரூபா	அபிப்பிராயம்
2021	193,057,152,383	1,614,661,568	191,442,490,815	-	முனைப்பழியுள்ள
2022	203,692,711,803	1,858,555,082	201,834,156,721	-	முனைப்பழியுள்ள
2023	207,990,644,076	1,980,022,523	206,010,621,553	-	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை
01	2018 ஆம் ஆண்டின் போது நிதியல்லாச் சொத்துக்களின் கிரயம் ரூபா 46,940.73 மில்லியனால் குறைவாகக் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 7,102.99 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டின் போது புதிதாக காணி கைப்பற்றலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2022, 2023	இந்த தவறை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	காணப்படுகின்ற பிரச்சனைகள் அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்த்து வைப்பதற்காக 61 சுகாதார நிறுவனங்களுடன் மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் களஞ்சிய மெய்மையாய்வுப் பிரிவுக்கு மாதாந்தம் பெற்று சொத்துக் கணக்கில் வைப்பதை பரீட்சிக்கப்படுகின்றமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
02	2018 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் ரூபா 14,793.13 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு	2022, 2023	இந்த தவறை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	- மேற்படி -	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	மூலதன சொத்துக்கள் அதற்கு சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.				
03	திறைசேரி கணக்குக் கூற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது வைப்பற்றப்பட்ட கட்டிடம் மற்றும் நிர்மாணக் கிரயம் ரூபா 6,501.94 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 2,967.27 மில்லியன் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2022, 2023	இந்த தவறை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	விலைமதிப்பீட்டு திணைக்களத்தால் நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மருத்துவமனை மற்றும் நிறுவனங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கு வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
04	திறைசேரியினால் பேணிச் செல்லப்படுகின்ற எஸ்ஏ 80 நிதியல்லாச் சொத்துக்களின் கணக்குகள் மாதாந்தப் பொழிப்பு மற்றும் எஸ்ஏ 82 திரண்ட நிதியல்லாத சொத்து கணக்கு அறிக்கையின் பிரகாரம் 2020	2021, 2022, 2023	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2024.09.30 ஆந் திகதி முதல் அனைத்து கொள்வனவுகளும் கணக்கு வைக்கப்படாது பொழிப்புகளை தயாரிக்க முடியாது New-Cigas கட்டமைப்பினை நாளதுவரையாக்க நடவடிக்கை	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் கிரயத்தில் காணப்பட்ட ரூபா 19,789.44 மில்லியன் வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.			எடுக்கப்பட்டுள்ளமை.	
05	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 192,229.15 மில்லியன் ஆக இருந்த போதிலும் திறைசேரியினால் பேணிச்செல்லப்பட்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கின் மாதாந்த பொழிப்பு (SA 80) மற்றும் திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அப்பெறுமதிகள் முறையே ரூபா 172,439.71 மில்லியன் மற்றும் ரூபா	2021, 2022, 2023	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	184,327.77 மில்லியன் ஆனமையால் காணப்பட்ட முறையே ரூபா 19,789.44 மில்லியன் மற்றும் ரூபா 7,901.38 மில்லியன் வேறுபாடுகளுக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.				
06	2021 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக்கூற்று (ACA 2(i) படிவம்) மற்றும் திறைசேரியால் பேணிச்செல்லப்படுகின்ற மாதாந்த செலவினப் பொழிப்பு (SA 10) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் திறைசேரியினால் பேணிச்செல்லப்படுகின்ற திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அப்பெறுமதிகளுக்கிடையிலான ரூபா 16,877.89 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2022, 2023	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
07	2020 ஆம் ஆண்டின் போது பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் நபர்களினால் அமைச்சிற்கும் மற்றும்	2022, 2023	கணக்கீடு செய்யப்படாத சகல சொத்துக்களும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	அதன் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலை நிறுவனங்களுக்கும் பல்வேறு பிரிவுகளுக்கும் நிதியல்லா உதவி அல்லது நன்கொடையாக பெறுமதி ரூபா 1,339.25 மில்லியன் ஆன பொருள் உபகரணங்கள், மருத்துவ வழங்கல்களின் பெறுமதி அறியாத பொருட்கள் மற்றும் உபகரணங்களில் 2,444 அலகுகள் வழங்கப்பட்டிருந்தவைகள் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.		எடுத்தல் வேண்டும்.		
08	2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட 54 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,603.09 மில்லியன் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் நிதியல்லாச்	2022, 2023	செயற்திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டமை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.				
09	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றுத் தொடர்பான கூற்றின் பிரகாரம் மற்றும் திறைசேரி திரண்ட நிதியல்லாச் சொத்துக்கணக்கு அறிக்கையின் பிரகாரம் (SA 82) அத்திகதியில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி 2022 ஆம் ஆண்டில் திறைசேரி திரண்ட நிதியல்லாச் சொத்துக்களின் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு அப்பெறுமதிகளுக்கு இடையே ரூபா 5,244.56 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாட்டுக்கான காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை.	2022, 2023	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
10	2022 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக்கூற்று (ACA 2(i) படிவம்) திறைசேரி அச்சிடல் குறிப்பு SA 10 இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்களைக்	2022, 2023	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	கைப்பற்றல் மற்றும் திறைசேரியின் திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கின் அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அறவிடப்பட்ட பிரகாரம் அந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 11,423.16 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.		வேண்டும்.		
11	கொவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார முறைமை தயார் செய்யும் செயற்திட்டத்தினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,326.05 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த சொத்துக்களின் கிரயம் அமைச்சின் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2022, 2023	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	-மேற்படி-	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
12	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சினதும் அதற்குரிய 59 நிறுவனங்களுக்கும் உரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை காண்பிக்கின்ற கணனி மென்பொருள்	2022, 2023	விரைவாக இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	விலைமதிப்பீட்டு திணைக்களத்தால் நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மருத்துவமனை மற்றும் நிறுவனங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கு	அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

	பிரதியின் பிரகாரம் வைத்தியசாலை/ 25 நிறுவனங்களின் காணிகளைப் போன்று வைத்தியசாலைகள்/ 05 நிறுவனங்களின் கட்டடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.			வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.	
13	இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட இரண்டு வாகனங்களின் கிரயம் ரூபா 11,550,000 தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சின் நிதியறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	2022, 2023	இந்த தவறையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.	உரிய சான்றுபடுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
14	நிறுவனம் / வைத்தியசாலை மற்றும் 31 பிரிவுகளுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 2,588.30 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் நிறுவனம்/ வைத்தியசாலைகள் மற்றும் 30 பிரிவுகளுக்கு கிடைக்கப்பெற்ற பெறுமதி தொடர்பாக உள்ளடக்கப்படாத தகவல்கள்	2022, 2023	சகல நன்கொடைகளும் குறித்துரைத்த பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	அனைத்து வெகுமதிகளையும் கணக்கு வைக்க அறிவுரை வழங்கப்பட்டு, அதற்கமைய கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	உள்ளடக்கப்படாத 2057 சந்தர்ப்பங்களுக்கு உரிய பொருட்கள் முறையான பிரகாரம் பதிவேடுகளுக்கு கொண்டுவந்து அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.				
15	2022 ஆம் ஆண்டின் திரண்ட நிதியல்லாச் சொத்துக் கணக்கு அறிக்கையில் (SA 82) இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 200,118.27 மில்லியன் ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையின் 2023 சனவரி 01 இல் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 195,221.42 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் ரூபா 4,896.85 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுட ன் இந்த வேறுபாட்டுக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில் லை.	2023	வேறுபாடுகளுக் குரிய காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2024.09.30 ஆந் திகதி முதல் அனைத்து கொள்வனவுகளும் கணக்கு வைக்கப்படாது பொழிப்புகளை தயாரிக்க முடியாது New-Cigas கட்டமைப்பினை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்ப டுத்தப்பட்டிருக் கவில்லை.
16	2023 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செலவினக்கூற்று (ACA 2(i) படிவம்)	2023	வேறுபாடுகளுக் குரிய காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை	உரிய திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுட ன், தற்போதைய பெறுமதிகளை	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்ப

	மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்பு SA 10 இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் செலவினம் ரூபா 11,605.50 மில்லியன் ஆக இருந்த போதிலும் திறைசேரியின் திரண்ட நிதியல்லாச் சொத்துக்கணக்கு அறிக்கையின் பிரகாரம் (SA 82) மீளாய்வாண்டின் சொத்துக் கொள்வனவு ரூபா 3,698.37 மில்லியன் ஆனமையால் சொத்துக்களின் கிரயம் ரூபா 7,907.13 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்த து.		மேற்கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை.	டுத்தப்பட்டிருக் கவில்லை.
17	அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 204,292.96 மில்லியன் ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சினதும் அதற்குரிய 63 நிறுவனங்களினதும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிதியல்லாச்	2023	வேறுபாடுகளுக் குரிய காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2024.09.30 ஆந் திகதி முதல் அனைத்து கொள்வனவுகளும் கணக்கு வைக்கப்படாது பொழிப்புகளை தயாரிக்க முடியாது New-Cigas கட்டமைப்பினை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்ப டுத்தப்பட்டிருக் கவில்லை.

	சொத்துக்கள் தொடர்பான தகவல்களைக் காண்பிக்கின்ற கணனி மென்பொருள் பிரதியின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 215,870.86 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 11,577.90 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.				
18	2024 மார்ச் 25 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 6,620.90 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் இந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 3,385.32 மில்லியன் சொத்துக்கள் மாத்திரம் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2023	சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உரிய திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், தற்போதைய பெறுமதிகளை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
19	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சு மற்றும் அதற்குரிய வைத்தியசாலைகள்/	2023	விரைவாக இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து	தற்போது விலைமதிப்பீட்டு திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள அனைத்து	அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கு

	63 நிறுவனங்களில் காணப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களில் காண்பிக்கப்படுகின்ற கணனி மென்பொருள் பிரதியின் பிரகாரம் வைத்தியசாலைகள்/ 27 நிறுவனங்களின் காணிகள், வைத்தியசாலைகள்/ 04 நிறுவனங்களில் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.		கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	மதிப்பிடப்பட்ட பெறுமதிகளும் New-Cigas கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் நிர்வாகத்திற்கு உட்படாத நிறுவனங்களுக்குரிய காணி மற்றும் கட்டிடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	வைக்கப்பட்டிருக்கவில்லை.
20	2018 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனை வைத்தியசாலை வளவில் சிறுநீரக சிகிச்சை அலகு மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 03 மாடிகளை உடைய சத்திர சிகிச்சை வாட் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்ட போதிலும் இந்த கட்டிடத்தின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2023	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அந்த கட்டிடங்களின் பெறுமதியை கணக்குகளில் உள்ளடக்கி கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை.	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
21	மொத்தக் கிரயம் 204,292.96 மில்லியன் ஆன நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான விரிவான பட்டோலை, பொருள் மெய்மையாய் அறிக்கை மற்றும் CIGAS நிகழ்ச்சித்	2021, 2022, 2023	இந்த தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய	2024.09.30 ஆந் திகதி முதல் அனைத்து கொள்வனவுகளும் கணக்கு வைக்கப்படாது பொழிப்புகளை தயாரிக்க முடியாது New-Cigas	2024 ஒக்தோபர் வரையிலும் இந்த பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	திட்டத்தின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான தகவல்கள், கடந்த ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்களின் மீதிக்கு சீராக்கப்பட்டிருந்த ரூபா 20,775.78 மில்லியனுக்குரிய 2023 மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,698.37 மில்லியன் சொத்துக் கொள்வனவுகளுக்கு உரிய ரூபா 6,944.27 மில்லியன் சொத்துக்கள் விற்றுத்தீர்ப்பதற்குரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் அப்பெறுமதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.		கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 42(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கட்டமைப்பினை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.
22	மருத்துவ வழங்கல் பிரிவிற்குரிய அந்த பிரிவின் பிரதான கணக்காளரால் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் பொறுப்புக்களின் மீதி ரூபா 79,784.95 மில்லியன் ஆக இருந்த போதிலும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,274.91	2023	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	வழுக்களை தவிர்த்து 2024 நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.	தவறுகளை திருத்தி 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

	மில்லியன் ஆனமையால் ரூபா 78,510.04 மில்லியன் ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.				
	மோசடிக்கு தொடர்புடையதாக சட்டமா அதிபரினால் 2021 ஒக்தோபர் 28 ஆந் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் நட்டம் தொடர்பாக குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்று கருதப்படுவதற்கு நிதி பிரமாணம் 103 இன் கீழ் குறித்த வரிசை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் அதிகார சபை சொந்தமான வரிசை அமைச்சான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் அது தொடர்பாக 2022 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		இதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	
3.	சூகித புரவர நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புளத்சிங்கள ஏகல்ஓய பல்நோக்கு கட்டிட நிர்மாணத்தின் ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா 41 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும். ஒப்பந்தம் கையளித்ததன் பின்னர் 03 கட்டங்களில் பகுதிகளாக்கப்பட்டு ஒப்பந்த பெறுமதி ரூபா 153 மில்லியன் வரை	2022	தேவையினை சரியாக இனங்கண்டு நிர்மாண திட்டங்களை செய்ய வேண்டியிருந்ததுடன், நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய	2021 நவம்பர் 16 ஆந் திகதி முதல் 30 வருட காலத்திற்காக பாடநெறி நடாத்துவதற்காக தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.	கட்டிடத்தை முழுமையாக பூர்த்தி செய்யாமையின் காரணமாக முழுமையான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இருந்ததுடன் வகுப்புக்களை நடாத்தக் கூடிய இடங்கள் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றது.

	272 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், கேட்போர் கூடத்திற்காக ஆசனங்களை பொருத்துதல், வழிப்பதனாக்கியிடல், வெளிச்சமூட்டல், மின் பாரந்தூக்கி, மேடைத் திரைகளை அமைத்தல் போன்ற வேலைப் பகுதிகளை மேவுகை செய்யாமல் கட்டிடத்தின் உரித்து புளத்சிங்கள பிரதேச சபைக்கு 2018 ஒக்டோபர் 20 ஆம் திகதி கையளிக்கப்பட்ட போதும், கட்டிடம் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக பயன்படுத்துவதற்கு முடியாது காணப்பட்டது. எனினும், 2021 நவம்பர் 16 ஆம் திகதி தொழில்பயிற்சி அதிகார சபையின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 04 வருடங்கள் அளவில் கடந்திருந்த போதிலும், அந்த கட்டிடத்தை நிர்மாணித்தால் எதிர்பார்த்த பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாதிருந்தம 2023 மார்ச் 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.			வகையில் முழுமைப் படுத்தி உரிய பிரிவுகளுக்கு கையளிப் பதற்கு நடவடிக் கை எடுத்தல் வேண்டும் .
4.	ரூபா 563 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் 2018 ஒக்டோபர் 26	2022	முன்னுரிமை தேவையி	காணி உரிமையாளர்களினால்	வழக்கு இன்னும் நடைபெறுகின்ற

ஆம் திகதி கையளிக்கப்பட்ட பிட்டிபன தலகல வீதியில் கட்டம் 1 அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மிகுதி வேலை நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக 2019 மார்ச் 06 மற்றும் 2020 நவம்பர் 27 ஆம் திகதியில் ரூபா 114 மில்லியன் கூட்டு மொத்தமாக வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1(ஆ) பந்தியின் பிரகாரம் செயற்திட்டங்கள் இடையூறு இன்றி அமுல்படுத்தக் கூடிய வகையில் விடயங்களை உறுதிப்படுத்தாமல் உரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் நிர்மாண நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கும் போது காணியை கைப்பற்றுதல் மற்றும் இழப்பீடு செலுத்துதல் தொடர்பாக பிரதேச வாசிகள் எதிர்ப்பு எழுந்திருந்தது. அந்த எதிர்ப்பின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையால் சந்தர்ப்ப சூழ்நிலையில் கிரயங்களுடன் நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிப்பதற்கு குறித்துரைத்த வீதியை நிர்மாணித்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை மக்களுக்கு

ன் அடிப்படையில் செயற்திட்டங்களை இனங்காணல் மற்றும் தேவையான காணிகளை கைப்பற்றுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இலக்கிடப்பட்ட காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்து உரிய நலன்கள் மக்களுக்கு வழங்குதல் அமைச்சின் பொறுப்பாகும்.

அந்தக் காணிகளுக்கு உரியதாக உள்ளடக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அரசாங்கத்தின் காணி சட்டத்தின் 14(2) (பீ) பிரிவின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் இலக்கம் 49528 மற்றும் 49529 இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

	வழங்குவதற்கு முடியாது காணப்பட்டது.				
5.	அமைச்சின் வீடமைப்பு பிரிவினால் 2017 – 2020 காலப் பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4,989 மில்லியன் ஆன 10 வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 27,555 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதற்காக ரூபா 4,025 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 5,604 வீடுகள் மாத்திரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிர்மாணித்தல் செயல் முன்னேற்றம் 25 சதவீதத்தை விட குறைவான 07 வீடமைப்பு செயற்திட்டங்களும், 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான 02 செயற்திட்டங்களும், 75 சதவீதத்திற்கு மேற்பட்ட ஒரு செயற்திட்டமும் காணப்பட்டது. இந்த செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டிய ஏனைய வீடுகளின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்யாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.	2022	ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் அத்தியவசியத்தின் பிரகாரம் நிதியினை வழங்கி செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.	2020 ஆம் ஆண்டு முதல் அது தொடர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக போதியளவான நிதியேற்பாடு, கட்டுநிதி கிடைக்காமை மற்றும் கட்டிடப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையினால் வீடுகளை நிர்மாணித்தலின் கிரயம் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் வீட்டு அலகு ஒன்றிற்காக வழங்கப்படுகின்ற தொகை வீட்டின் முழுமையான வேலையினையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் காணப்படவில்லை. அதன் பிரகாரம் மேலதிக நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது.	2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் செயல் முன்னேற்றத்தில் மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை.

6.	2030 ஆம் ஆண்டு வரையில் சகருக்கும் போதியளவான பாதுகாப்பு உடனான வீடுகளின் கிடைப்பனவு மற்றும் வசிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல் நிலைபேறான அபிவிருத்தி இலக்காக இனங்காணப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இன் இறுதியின் போதும் பெறப்பட்டிருந்த செயல்முன்னேற்றம் இலக்கின் அளவில் 8 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	2022	அடையக் கூடிய இலக்குக ளை இனங்கா ண வேண்டியி ருந்ததுட ன், இலக்கின ை அடைந்து கொள்வ தற்கு நடவடிக் கை எடுத்தல் முகாமை த்துவத்தி ன் பொறுப்ப ாகும்.	புதிய நிர்மாணங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது டன் பகுதி பூர்த்தி செய்யப்பட்ட நிதியேற்பாடு மற்றும் கட்டுநிதி போதியளவான பிரகாரம் வழங்கப்படாத மையினால் எதிர்பார்க்கப்ப ட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்த து.	இதுவரை பெறப்பட்டுள்ள செயல்முன்னேற் றம் 0 சதவீதம் - 49 சதவீதத்திற்கு இடையில் காணப்பட்டது.
7.	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மீண்டெழும் செலவின விடயங்கள் 45 மற்றும் மூலதன செலவின விடயங்கள் 45 இற்கான நிதியேற்பாடு ரூபா 125 மில்லியன் மற்றும் ரூபா 28,933 மில்லியன் தொகையில் முறையே ரூபா 74 மில்லியன் மற்றும் ரூபா 10,404 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.	2021 2022	தேவைய ான நிதியேற்ப ாட்டை சரியாக எதிர்வு கூறப்பட ல் வேண்டும் .	பாதீட்டு மதிப்பீட்டை தயாரிக்கும் போது உள்ளபடியாக ஏற்படும் என எதிர்பார்க்கின்ற எதிர்வுகூறலின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படுக ின்றது.	2023 ஆம் ஆண்டின் போதும் இவ்வாறே ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் அதிக சதவீதம் சேமிக்கப்பட்டிரு ந்தது.
8.	திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கோலுவாகொட விவசாய சுற்றாடல் பூங்கா செயற்திட்டம் 2021 ஆகஸ்ட் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பூர்த்தி	2023	முறையா ன அங்கீகார த்தின் அடிப்பை டயில் செயற்திட் டத்தை அமுலாக் கல்	65 சதவீதத்திற்கு மேற்பட்ட வேலை அளவு அதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டிரு ந்தமையால் வேலைகள் பூர்த்தி	அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை.

	செய்யவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் மொத்த செலவினம் ரூபா 450.56 மில்லியன் அதாவது உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 131 சதவீதமாக இருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தேசிய திட்டமிடல் பணிப்பாளர் நாயத்தின் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.			வேண்டும்.	செய்யாமையின் அடிப்படையில் செயற்திட்டம் கைவிடப்படுமாயின் நட்டத்தைக் கவணத்தில் கொண்டு இந்த நிர்மான நடவடிக்கைகள் 2023 வரை அமுல்படுத்தப் பட்டிருந்தது.
9.	மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 19,127 மில்லியன் ஆன அறுவக்காலு சுகாதார கழிவுகள் நிறுத்தும் செயற்திட்டம் 2018 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 30 திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு 04 தொகுதிகளின் கீழ் அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தில் கழிவுகளை மாற்றும் நிலையம், சுகாதாரமான நிலத்தை சுகாதார ரீதியில் நிலத்தை நிரப்பி நிர்மாணித்தல் மற்றும் புகையிரத வீதிகளை நீடித்தல் என்ற 03 தொகுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் சீன கம்பனி ஒன்றுக்கு கையளிக்கப்பட்ட	2023	செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நலன்களை பொதுமக்களுக்கு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	03 நிறுவனங்களில் EOI சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவற்றை மதிப்பீடு செய்த பின்னர் மீண்டும் 2024 மார்ச் 22 ஆம் திகதி CANC சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்மொழிவுக்கான கோரிக்கையை (RFP) கோருவதற்காக தற்போது அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	தற்போது வரையில் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 33,237 மில்லியன் ஆகும். செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தொழில் நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் தற்போது கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற அரச நிறுவனங்களுடன்

போதும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யு தொகுதியின் கீழ் புகையிரத எஞ்சின் தொகுதிகள் 04 ரூபா 8.27 மில்லியன் செலவில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இறக்குமதி செய்யப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்ததுடன் 94 கொள்கலன் பெட்டிகள் அ.டொலர் 0.8 மில்லியன் செலவில் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 34 புகையிரதப் பெட்டிகள் அ.டொலர் 2.3 மில்லியன் பெறுமதியில் இந்திய கம்பனியில் இருந்து இறக்குமதி செய்வதற்காக 2019 ஒக்டோபர் 21 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்தால் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டமைப்பு ரீதியான திட்டம் நிர்மாணிக்காமையினால் உடன்படிக்கை பயனற்று காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புகையிரத பொட்டிகளை வழங்குவதற்கு மடியாதிருந்தது. எனினும் இந்த கலந்துரையாடி அதன் மூலம் உரிய செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆர்வம் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அந்த அரச நிறுவனங்கள் எதிலும் அதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி ரீதியான இயலளவு காணப்படாமையினாலும் தோல்வியடைந்திருந்தது.

	செயற்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,016 மில்லியன் செலவிடப்பட்டிருந்த பௌதீக செயல்முன்னேற்ற 92 சதவீதம் ஆகும். இந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்து அரச – தனியார் கூட்டுமுயற்சியின் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் இதுவரை அது அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.				
10.	மத்திய வருமான வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் நடுத்தர வருமான நலனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் வீடுகளை நிர்மாணிக்கும் 12 செயற்திட்டங்கள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2,939 வீட்டு அலகுகளை உடைய 09 வீடமைப்புத் திட்டங்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 11,353.15 மில்லியன் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த து. எனினும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் இந்த செயற்திட்டத்தின்	2023	செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ள வேண்டும்.	04 செயற்திட்டங்கள் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 ஆலோசனையின் பிரகாரம் நிறுத்தப்பட்டுள்ளது. 02 செயற்திட்டங்களின் வீடுகளின் விலைகள் உயர்வடைந்து சென்றதன் காரணமாக வீடுகளை கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர்கள் முன்வந்திருக்க வில்லை. ஒரு	தற்போது காணப்படுகின்ற நிலைமையின் பிரகாரம் மிகுதி நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு இயலுமை காணப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

	நிர்மாண நடவடிக்கைகள் செயற்படும் நிலையில் காணப்படவில்லை.				செயற்திட்டத்தின் வேலை 2024 மே 05 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. ஒரு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் குறைபாடுகளை சரிசெய்யப்படுகின்றது.
11.	நகர புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் நலனாளிகளுக்கு கொலம்பகே மாவத்தையில் 615 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 2,546.10 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020 நவம்பர் 20 ஆந் திகதி வரையில் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 39 சதவீதமான வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. அத்திகதி வரையில் கூட்டுத்தாபனத்தால் ரூபா 1,255.30 மில்லியன் அதாவது மொத்தப் பெறுமதியில் 49 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.	2023	செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ள வேண்டும்.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	கொலம்பகே மாவத்தை செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நிதியம் ஒதுக்குமாறு 2024 இன் பாதீட்டின் மூலமும் கோரப்பட்டுள்ளதுடன் இது வரை நிதியேற்பாடு கிடைத்திருக்கவில்லை. மேலும் 2025 இன் பாதீட்டிற்காகவும் நிதியேற்பாடு ஒதுக்குவதற்கு கோரப்பட்டுள்ளது.

	03 வருடங்கள் முதல் அதிலிருந்து எந்தவொரு ஆக்கபூர்வமான பயன்பாடும் பெறப்படாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட செலவினத்திற்காக செய்யப்பட்ட ரூபா 1,255.30 மில்லியன் தொகையும் பயனற்றதாக இருந்தது.				
12.	யாழ்ப்பாணம் நகர சபை கட்டிடம் மீள கட்டியெழுப்புவதற்காக ரூபா 2,142.48 மில்லியன் ஒப்பந்தப்ப றுமதியில் இன்ஞினியரிங் சேவிசஸ் தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்தோபர் 09 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் குறித்துரைத்த கால எல்லையில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் 2024 ஒக்தோபர் 09 ஆந் திகதி வரை 1,125 நாள் நீடித்தல் 04 நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 66 சதவீதமாக இருந்ததுடன் நிதி செயலாற்றல் ரூபா 1,636.15 மில்லியன் ஆக இருந்தது. இந்த செயற்திட்டத்தின்	2023	பாரிய அளவிலான செயற்திட்டங்களை மீண்டும் திட்டமிடுதல் மற்றும் வரைவு படுத்துதல் தொடர்பாக குழுவில் (RAMP) பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும்.	RAMP தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டம் யாழ்ப்பாண நகர சபையினால் கையேற்றல் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக RAMP குழுவினால் மீண்டும் கூட்டம் ஒன்று கோரப்பட்டிருந்தது. அதன் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக பொருத்தமான தீர்மானம் ஒன்றை கவனத்தில் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டம் 1 ஆக இனங்காணப்பட்ட பகுதி மாத்திரம் பூர்த்தி செய்து முழுமையான செயற்திட்டமும் யாழ்ப்பாண	வடமாகாண ஆளுநரின் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2025 இன் நிதி ஆண்டிற்காக பாதீட்டில் இருந்து நிதி ஒதுக்குமாறு கோரப்பட்டிருந்தது. அந்த கோரிக்கை தொடர்பான ஆலோசனைப் பத்திரக் கடிதம் தேசிய செயற்பாடுகள் சபைக்கு (NOR) இற்கு அனுப்புவதற்காக அமைச்சின் செயலாளரின் கையொப்பத்திற்காக அனுப்பபட்டுள்ளது.

					மாநகர சபைக்கு கையேற்பதற்கு இணக்கம் தெரிவித்து கையேற்பதற்கு திட்டமிடப்பட்டி ருந்தது.	
	ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3,769 மில்லியன் வரை ரூபா 1,627 மில்லியனால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிர்வாகம் மற்றும் ஆலோசனை பிரிவுகளின் தோல்வி அலகுகளின் நலிவான செயல் மேற்பார்வை இதற்குக் காரணமாக இருந்தது. பாரியளவிலான செயற்திட்டங்களை மீண்டும் திட்டம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் விரைவுபடுத்துதல் (RAMP) தொடர்பாக 22/1286/604/022 மற்றும் 2022 செப்தெம்பர் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மூலம் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் படி இந்த செயற்திட்டத்தின் மிகுதி வேலைப்புகுதிகளை பூர்த்தி செய்யும் பொறுப்பு கம்பனி ஒட்டுமொத்த கட்டிடமும் யாழ்ப்பாண நகர சபைக்கு கையளிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.					
13.	258 கடைகளை உடைய பாணந்துறை பொதுச்சந்தையின் கட்டிடத் தொகுதியின் நிர்மாண ஒப்பந்தம் ஆரம்ப கேள்வி தகைமை	2023	செயற்திட ங்களின் நிர்மாண நடவடிக் கைகள் செயற்பா டுகள்	இந்த செயற்திட்டம் தற்போது எந்த முறையிலாவது அமுல்படுத்தப் படுவதுடன் உரியவாறு	திட்டமிடப்பட்ட காலத்தில் ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது . ஆரம்ப	

	பரிசோதனையின் போது நிராகரிக்கப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா 385 மில்லியன் (வட் இன்றி) 2021 செப்டெம்பர் 23 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது டன் 2023 மார்ச் 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்படவேண்டி இருந்தது. எனினும் அத்திகதியில் வேலை பூர்த்தி செய்யப்படாமையினால் 2024 சனவரி 15 ஆந் திகதி வரை 297 நாட்கள் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் உரிய சரியான மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்படாதிருந்தமை யால் திருத்தப்பட்ட ஒப்பந காலத்தின் போதும் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.		மற்றும் மேற்பார்வை தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தி குறித்துரைத்த காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	ஆய்வு செய்யப்பட்ட கால நீடிப்புக்கான கோரிக்கை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.	கட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
14.	ரூபா 8,413 மில்லியன் திறைசேரி நிதியேற்பாட்டின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 14,022 வீடமைப்பு வீட்டு அலகுகள் ‘‘ஒப்பட்ட கெயக் றட்டட ஹெட்டக் செயற்திட்டம்’’ இன் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2022	2023	திட்டமிடப்பட்ட பிரகாரம் காலரீதியில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.	திறைசேரியில் இருந்து உரிய பிரகாரம் நிதியேற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் குறிப்பிட்ட வருடத்தில் மொத்த வீட்டு எண்ணிக்கையினையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.	2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் செயல் முன்னேற்றத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

	திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 7,704.95 மில்லியன் செலவில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 79 சதவீத செயல் முன்னேற்றம் அதாவது 7,744 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த துடன் 75 வீட்டு அலகுகளின் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது.				
15.	2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) பந்தியின் பிரகாரம் பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனம், தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வது தொடர்பிலும் அல்லது பதிவின் உரித்து உரிமையான நிறுவனத்திற்கு முறையாக கையளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் சட்ட ரீதியான உரித்து அமைச்சிற்கு சொந்தமில்லாத ரூபா 414.81 மில்லியன் பெறுமதியான 31 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றது.	2023	சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அந்த வாகனங்களின் உரித்தைக் கையேற்பதில் பிரச்சினைகள் காணப்படுவதனால் சட்ட ரீதியான உரித்தைக் கையேற்பதற்கு தாமதமடைந்திருந்தது.	21 வாகனங்களின் உரித்து இன்னும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

16.	நூறு நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சு நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,845 மில்லியன் பெறுமதியான 29 செயற்திட்டங்கள் சட்ட ரீதியாக உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அந்த சொத்துக்கள் எந்தவொரு நிறுவனத்தினதும் கணக்கு கூற்றுக்களில் உள்ளடக்காமையின் காரணமாக இந்த சொத்துக்களை கணக்குகளில் இருந்து கைவிடுவதற்கான இயலுமை காணப்பட்டது.	2023	சொத்துக்கள் சட்ட ரீதியாக கையளிக்கப்படல் வேண்டும்.	இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய நிறுவனத்தை கையேற்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதும் நிர்மானங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சில பிரச்சனைகள் சமர்ப்பிக்கப்பட்டமையால் அந்த செயற்திட்டத்தைத் கையேற்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.	இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
17.	2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 370 மில்லியன் ஆக இருந்ததுடன் மஹர நிருவாகம் மற்றும் வணிக கட்டிடத் தொகுதியில் முன்பக்கத்தில் கடைகள் மற்றும் சகல வசதிகளையும் உடைய உணவகம் என்பன 05 வருட காலம் அளவில் பயனற்றுக் காணப்பட்டது. மின்பாரந்தூக்கி இயந்திரங்கள் இரண்டும் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய 428 இருக்கைகளை உடைய கேட்போர் கூடத்தின் வேலைகள்	2023	கட்டிட நிர்மாணத்தின் குறைபாடுகளை சரி செய்து அதனை ஆக்க பூர்வமாக பயன்படுத்தி அரசாங்கத்திற்கு சாதகமான பிரகாரம் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை	மகர பிரதேசத்தில் முன்னர் காணப்பட்ட குறைபாடுகளுடனான அரச நிறுவனங்கள் மற்றும் பொது நடவடிக்கைகளுக்கான முறையான இடம் ஒன்று காணப்படாமையின் குறைபாட்டை மாற்றி அமைப்பதற்கு முன்னர் பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் காணப்பட்ட	மகர பிரதேச சபையின் கோரிக்கையை கவனத்தில் கொண்டு 30 வருட காலத்திற்காக நிர்வாக மற்றும் வணிக கட்டிட தொகுதி முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் கீழ் பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட திகதியிலிருந்து எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. கட்டிடத்தில் மின் எதிர்ப்பு இலத்திரனியல் பிரிவு எந்தவொரு தரப்பினரால் கழட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது .2023 யூன் 06 ஆந் திகதி ஒப்பந்தத்தின் நிறுத்தி வைத்தல் பணம் இதுவரை செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய பட்டியல் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டமை அரச நிதி செயற்திறனின்மையாக பயன்படுத்தப்படுவதுடன் இது தொடர்பாக அமைச்சினால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எடுத்தல் வேண்டும் .	இடத்தில் பல்நோக்கு கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

3.8 மின்சக்தி மற்றும் வலு அமைச்சு

விபரம்	மொத்தச் சொத்துக்கள் (ரூபா)	மொத்தப் பொறுப்புக்கள் (ரூபா)	உரிமை (ரூபா)	இலாபம்/மிகை/ (நட்டம்)/(பற்றாக்குறை) (ரூபா)	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	-	-	-	-	முனைப்பழியற்ற
2022	-	-	-	-	முனைப்பழியற்ற
2023	-	-	-	-	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிருவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை	அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளின் அமுலாக்கல் நிலை
(அ)	ரூபா 19,288 மில்லயன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தேசிய நிலையத்திற்கு 31 MW இயலளவுடைய அமுலாக்குகின்ற நோக்குடன் மொறக்கொல்ல நீர்மின்சார பொறி நிர்மான செயற்திட்டம்2014 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 3 ஆண்டுகள் தாமதத்துடன் 2018 ஆம் ஆண்டில் அதன் வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. அதேபோல பெறப்பட்ட கடனிற்காக 2017 இல் கடப்பாட்டு கட்டணங்களாக அண்ணளவாக ரூபா	2021, 2022, 2023	குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்திட்ட வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் குறித்த இலக்குகள் அடையப்பட வேண்டும்.	செயற்திட்டம் பரந்துசெல்லும் மீன்கள் தன்படுவதால் தாமதப்பட்டிருந்தது. மஹாவலி அதிகாரசபையின் கவனப்பில் நீர்தேக்கத்தின் அணைக்கட்டு வடிவமைப்பினை மாற்றவதற்கு வேண்டப்பட்டது, சுற்றாடல் அனுமதிகளில் தாமதம, கோவிட் நோய்தொற்ற நிலைை மற்றும் பின்னர் நாட்டின் பொருளாதார சிக்கல் என்பவற்றதல் பௌதீக முன்னெற்றம் 74 சதவீதத்தை அடைந்திரந்ததுடன் ரூபா 16,844	2024 யூன் 30இல் உள்ளவாறான முன்னேற்றம் 75 சதவீதமாக இருந்தது.

				மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.	
				செயற்திட்டத்தின் கடன் வசதி காலாவதியாகும் பொது 2024 யூலை 13 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்தது.	
				இருக்கின்ற வேலைகளிற்காக நிதியளிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வேண்டுகையை சமர்ப்பித்திருந்தது.	
				இதன்படி, 2024 இறுதிக்கு மன்னர் நீர் மின்சார உற்பத்தி தொடங்குவதற்கு இந்த செயற்திட்டத்தால் முடியுமென எதிர்பார்க்கப்பட்டது.	
(ஆ)	தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் மேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் பரிமாற்ற வலையமைப்பை விருத்தி செய்யும் நொக்கில் 04 பொதிகளின் கீழ் அமுலாக்கப்படடிருந்ததுடன் பரிமாற்ற நட்டங்களை குறைத்தல் 2015 சனவரியில் தொடங்கி 2018	2021, 2022, 2023	இடைவெளியில் செயற்திட்டம் பூர்த்தியாக்கலிற்கான பரிந்துரைகள் மற்றும் நிறுத்தப்பட்ட வேலைகளின பூர்த்தியாக்கல் என்பன உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும்.	செயற்திட்டம் JICA நிதியளித்தல் நிறுத்தியமையால் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடைய முடியாதிருந்தது. பெருளாதார சீரமைப்பு நடைபெறுகின்ற போது JICA நிதிகள் பெறுவதில் சிக்கல் காரணமாக பொதிகள் 01 மற்றும் 02 இலங்கை மின்சார சபை நதிகளை	இலங்கை மின்சார சபை நிதிகளை பயன்பதுதி பொதி 01 மற்றும் 02 அமுலாக்கப்படுகின்றது. பொதி 03 மற்றும் பொதி 04 தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

	சனவரியில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,942 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தின் பொதிகள் 1 மற்றும் 2 இல் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் இருக்காததுடன் அமுலாக்கலை இடைநிறுத்தியிருந்த பொதிகள் 3 மற்றும் 4 இன் மீளமுலாக்கலிற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கவில்லை.			பயன்படுத்தி அமுலாக்கப் படுகின்றதுடன் பொதிகள் 03 மற்றும் 04 தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதன்படி, செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டம் மேற்கொள்ள முடியாதிருந்ததென தெளிவாக உள்ளது.	
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப்பிரமாணத்தின் 104.(3) மற்றும் 104 (4) இன் பிரகாரம் 2021-2023 காலத்தின் போது நிகழ்ந்த 07 வாகன விபத்துக்களின் ஆரம்ப அறிக்கை மந்தமான தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதி அறிக்கை 2024 மே மாதம் வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.	2021, 2022, 2023	நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	திருத்தங்கள் மற்றும் பொலீஸ் அறிக்கை உடனடியாக பெறப்பட்டது, நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய அறிக்கைகளை வழ்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய இறுதி அறிக்கைகள் இன்னமும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை
(ஈ)	அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில்	2022, 2023	சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கைகள்	அமைச்சின் உத்தியோகத்தர்களை கொண்டுள்ள	இன்னமும் அறவீடுகள் செய்யப்பட்டிருக்க

உள்ளடக்கப்பட்டிருக காத பதல கடமை அடிப்படையில் முறையான நியமனம் செய்யப்பட்டதென முன்னைய ஆண்டு கணக்காய்வு அறக்கையில் அவதானிப்புகளில் உள்ளடக்கப்பட்டதுட ன் 07 ஆண்டுகளாக சம்பளங்காக ரூபா 2,047,347 கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் 2024 ஏப்ரல் 30 வரையும் சொல்லப்பட்ட தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை.	எடுக்கப்பட வேண்டியதுடன் நி.பி. 135, 136, 137, 138 இன் பிகாரம், முறையற்ற படி கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும்.	குழு ஆரம்ப புலனாயடவு நடாத்தவதற்கு நியமிக்கப்பட்டிருந்த துடன் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.	வில்லை

3.9 பாதுகாப்பு அமைச்சு

	மொத்த சொத்துக்கள்	மொத்த பொறுப்புகள்	உரிமை	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	36,927,847,351	515,377,047	36,412,470,304	**முனைப்பழியுள்ள்**
2022	43,044,570,365	941,895,796	42,102,674,569	**முனைப்பழியுள்ள்**
2023	40,694,316,668	894,999,209	39,799,317,459	**முனைப்பழியுள்ள்**

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக் குட்படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை
01.	தொடக்க வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 130 சதவீதத்திலிருந்து 147 சதவீதம் வரையான முரண்பாடுகள் காணப்பட்டன. 2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையேயும் 36 சதவீதத்திலிருந்து 91 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டன.	2023	1.ஃ.2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் வருமான மதிப்பீட்டினை முடியுமான அளவு நடைமுறைச் சாத்தியமாக தயாரித்தல் வேண்டும்.	2024 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடுகளுக்கான திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் உண்மையான வருமான மதிப்பீடுகள் மீண்டும் பெறப்படுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.	நடைமுறை ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையிலும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கிடையேயும் வேறுபாடுகள் இருப்பதைக் அவதானிக்க முடிகிறது.
02.	2023 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயல் நடவடிக்கை	2023	வாகன கைதவிர்ப்புக்கள் மற்றும் ஒப்படைப்புக்களை	எதிர்காலத்தில் யதார்த்தமாகத செயல் நடவடிக்கை	நடப்பாண்டின் மூன்றாம் காலாண்டு வரைக்குமான

	திட்டத்தின் பிரகாரம், ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருமானத்திற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையில் 176 சதவீத வேறுபாடு இருந்ததால், வருமான மதிப்பீடுகள் யதார்த்தமாகத் தயாரிக்கப்படவில்லை.		சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	திட்டத்தினை தயாரிப்பது குறிப்பிடத்தக்கது. அமைதி காக்கும் பணிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்யும் வீரர்களின் எண்ணிக்கை, உபகரண விநியோகம், அதிகாரிகளை நியமணம் செய்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடானது யதார்த்தமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.	திருத்தப்பட்ட வருவான மதிப்பீட்டிற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையே கணிசமான வேறுபாடுகள் இருப்பதைக் அவதானிக்கப்படுகிறது.
03.	2024 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளில் இருந்து 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 39 வழக்குகளுக்காக மொத்தமாக ரூபா.3,106,817 செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அந்தச் செலவுகள் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023	நிதிப்பிரமாணம் 94(2) இலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பொறுப்புக்களை அடையாளங்கண்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும்.	நிதிப்பிரமாணம் 94(2) இன் அடிப்படையில், ஒரு அகக் கட்டுப்பாட்டு முறைமையினை செயல்படுத்துவது குறிப்பிடத்தக்கது, இதன் மூலம் ஈடுபாடுகள் மற்றும் பொறுப்புகள் அடையாளம் காணப்பட்டு இயன்றவரையிலும் ஆவணங்களில் பதிவுசெய்ய முடியும்.	மீளாய்வுக் காலத்தின் போது ஒவ்வொரு வருடமும் பொறுப்புகள் சரியாக அடையாளம் காணப்படவில்லை.

04.	நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் வருமானங்கள் சம்பந்தமான நிதி அதிகாரத்தினை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு வருமானம் மற்றும் உரிமக்கட்டண வருமானத்திற்குரிய நிதி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	2023	நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம், உரிமக் கட்டணம் மற்றும் சமாதான செயற்பாட்டு வருமானம் ஆகிய இரண்டு வருமான தலைப்புக்களுக்கான நிதி அதிகாரத்தை வழங்குவது 2025 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	2024 ஆம் ஆண்டு தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான செயற்பாட்டு வருமானம் மற்றும் உரிமக் கட்டண வருமானம் தொடர்பான நிதி அதிகாரத்தை வழங்குவது 2024 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக இல்லை.
05.	அமைச்சினால் சம்பளம் செலுத்தப்படும் அரசாங்க உளவுச் சேவை மற்றும் தேசிய பயிலுனர் படையணி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 2292 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட ∴ உள்ளபடியான ஆளணியினர் அல்லது அதன் மாதாந்த மாற்றங்கள் தொடர்பான கட்டுப்பாட்டு அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை.	2023	நிதிப்பிரமாணம் 453(ஏ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முழுமையான ஊழியர் கடப்பாடு தொடர்பான அறிக்கையை சரியாக பேணுதல் வேண்டும்.	அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளருக்கு மாதந்தோறும் அரச புலனாய்வு சேவையின் தகவல்களை கொண்டு வருமாறும் கட்டுப்பாட்டு பதிவேடுகளை முறையான முறையில் பேணுமாறும் பணியாளர்களின் தகவல்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறும்	அங்கீகரிக்கப்பட்ட / உள்ளபடியான ஆளணியினர் அல்லது அதன் மாதாந்த மாற்றங்கள் தொடர்பான கட்டுப்பாட்டு அறிக்கை பேணுவதில் பலவீனங்கள் தொடர்கின்றன.

				அறிவிக்கப்பட்டுள்ளது.	
06.	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்ற, மரணமடைந்த, வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்திர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 5,004,395 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 1,297,832 ஆகும்.	2023	2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய ீநுனு.ஃசுநுனு.ஃ2015.ஃ.8 ஃ.பொது(1) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01.ஃ.2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டி கோவை இலக்கம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் வேண்டும்.	20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிட முடியாத ரூபா 590,703 தொகையான 03 கடன் மீதிகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக அனுப்பிவைத்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல், கடனை தீர்த்துவைக்கு மாறு இறுதியான தெரியப்படுத்தலினை மேற்கொள்ளல், ஓய்வூதிய பணிக்கொடைகளிலிருந்து அறவீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடப்பாண்டின் மூன்றாம் காலாண்டு வரையிலுமான நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கான செயல் முன்னேற்றம் 31 சதவீதமாக காணப்படுகிறது மற்றும் அறவீட செய்ய வேண்டிய நிலுவைத் தொகை ரூபா.3.44 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டது.
07.	குறித்த நோக்கத்திற்கான உபகட்டுநிதியானது உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை	2023	நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் , குறித்த செயலுக்கான உப கட்டுநிதியை உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட	இது சம்பந்தமாக உரிய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் மீண்டும் தெரியப்படுத்துவதற்கும்	உப கட்டுநிதியை தீர்ப்பனவு செய்வதில் மேலும் கால தாமதம் தொடர்கிறது.

	எடுக்கப்படல் வேண்டும். இருந்த போதிலும் 64 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,648,332 முற்பணம் 25 நாட்களிலிருந்து 200 நாட்கள் வரையான கால வீச்சிலான தாமதத்துடன் தீர்ப்பனவு செய்தல் இடம்பெற்றிருந்தது.		உடன் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	
08.	பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாண சேவைகள் தாமதித்தல், நாணயக் கடிதத்தினை திறப்பதில் தாமதம் முதலிய காரணங்களினால் ஒப்பந்தத்தினை பூர்த்திசெய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் ஒப்பந்த காலத்தினை நீடிக்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான 02 வழங்கல் ஒப்பந்தங்களினால் ரூபா 837,497,744 மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 3,675,029 ஆன 19 உரிமைக் கோரல்கள் (ஊடயஅைள கழச நுழுவு) வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது.	2023	சிக்கனமற்ற செலவுகள் ஏற்படுவதனை தவிர்த்துக் கொள்ளுவதற்கும் தேவையற்ற தாமதங்களை கட்டுப்படுத்துவதற்கும் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.	செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் கால நீடிப்பு கோரிக்கைகளை கோரியுள்ளனர். 19 கோரிக்கைகளில் 09 கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.	சிக்கனமற்ற செலவுகள் ஏற்படுவதனை தவிர்த்துக் கொள்ளுவதற்கும் தேவையற்ற தாமதங்களை கட்டுப்படுத்துவதற்குமான பொறுப்பு மேலும் பொருத்தமானதாகவுள்ளது.

09.	தேசிய இடர்நிவாரண சேவைகள் செயற்பாடுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட மண்சரிவினால் வீடுகளை இழந்த மற்றும் மண்சரிவு ஏற்படும் அதிக ஆபத்து வலயங்களில் குடியிருக்கின்ற குடும்பங்களை அகற்றி பாதகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அரசாங்கத்தின் நிதி உதவியின் அடிப்படையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த 205 வீடுகளுக்கு நீர் மூலங்கள் இல்லாதிருந்தமை மற்றும் 03 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த 82 வீடுகளுக்கு மின்சார வசதிகள் இல்லாதிருந்தமையின் காரணமாக மொத்தமாக ரூபா 344,400,000 நிதி உதவி பெற்றுக்கொண்ட நலன்பெறுனர்கள் அந்த வீடுகளில் குடியிருக்கவில்லை. மேலும் மொத்தமாக ரூபா 15,900,000 பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட 17	2023	பாதுகாப்பான இடங்களில் நபர்களைக் குடியமர்த்தும் போது நீர், மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைப்பாடுகளை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்ற இடங்களில் குடியமர்த்துதல் வேண்டும்.	மீள்குடியேற்றத் திற்கு பயன்படுத்தப்படும் அரச காணிகளுக்கு குடிநீர் மற்றும் மின்சாரம் வழங்குமாறு கோரிய கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா. 39.96 மில்லியன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சரியான நேரத்தில் செயல்படாததால் முக்கிய நோக்கங்களை அடைவதில் மேலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

	நலன்பெறுனர்களினால் அந்த வீடுகளின் உரிமை கைவிடப்பட்டிருந்தது.				
10.	05 மாவட்டங்களில் பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மொத்தமாக ரூபா 200,600,000 தொகையான பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட 258 நலன்பெறுனர்கள் பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட கட்டங்களுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றாது நிர்மாண நடவடிக்கைகளை கைவிட்டிருந்ததுடன் மொத்தமாக ரூபா 82,700,000 தொகையான பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட 90 நலன்பெறுனர்கள் பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட கட்டத்திற்குரிய செயற்பாடுகளை மாத்திரம் நிறைவேற்றி நிர்மாண நடவடிக்கைகளை கைவிட்டிருந்தனர்.	2023	முறையான மேற்பார்வையுடன் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல வேண்டும்.	மீள்குடியேற்ற செயற்திட்டத்தை முன்னோக்கி அமுல்படுத்துவதற்காக, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. செயற்திட்ட அமுலாக்கல் வழிகாட்டுதல்கள் வரைவு செய்யப்பட்டுள்ளது மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவு அமைப்பின் அடிப்படையில் கட்டுமானப் பணிகளை கைவிடும் தரப்பினரைக் கண்டறிந்து அவர்கள் தொடர்பான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.	சரியான நேரத்தில் செயல்படாததால் அடிப்படை நோக்கங்களை அடைவதில் மேலும் கால தாமதம் ஏற்படுகின்றது.

11.	பாதுகாப்பான இடங்களில் மீளக்குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஒரு வீட:டுடன் ஒரு காணியை கொள்வனவு செய்வதற்காக மொத்தமாக ரூபா 9,600,000 பிரதிபலனைப் பெற்றுக்கொண்ட 06 நபர்களினால் அப்பணத்தினைப் பயன்படுத்தி காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.	2023	நன்மைகள் உரிய செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படுகின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலுடன் பொற்றுப்புக்கூறும் நடைமறை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.	முறைகேடான பயன்பாட்டைத் தடுப்பதற்கு பணத்தை அறவீட செய்வதற்கான வழிமுறைகளுடன் செயற்திட்ட செயலாக்க வழிகாட்டுதல்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.	போதுமான அளவு முறைகேடுகளைத் தடுக்கும் வழிமுறைகள் செயல்படுத்தப் படவில்லை.
12.	2023 வழங்கல் ஆண்டிற்காக முப்படைகளின் 151,429 முகாம் உறுப்பினர்களுக்கு சமைக்காத மற்றும் உலர் உணவுகரளை வழங்குவதற்காக அமைச்சினால் ரூபா 96 பில்லியன் செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் கேள்வி வழங்கப்பட்டடிருந்த துடன் முப்படைகளால் இந்த உணவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் தொடர்பாக ஒத்த மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டிருககாததுடன் பல்வேறு	2023	முன்னைய ஆண்டுகளின் உள்ளபடியான பயன்பாட்டினை கருத்தில் கொண்டு நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும்.	முப்படைகளிலும் உள்ள குடித்தொகையினை கருத்தில் கொண்டு 2025 ஆம் ஆண்டிற்கான யதார்த்தமான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் யதார்த்தமாகத் தயாரிக்கப்படவில்லை.

	அடிப்படைகளில் உணவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இலங்கை இராணுவப் படையிலுள்ள ஒரு நபரின் நாளாந்த அரிசித் தேவைப்பாடு 190 கிராம்களாக ஒரு நியம அளவு பேணப்பட்டிருந்தும் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் பொது 633 கிராம்களாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு கடற்படை அங்கத்தவரின் ஒரு நாள் உணவுத் தேவைப்பாடு அரிசி, தானியம், மரக்கறி, இறைச்சி, மீன் மற்றும் கருவாடு உள்ளடங்கலாக 140 உணவு வகைகளின் 27 கிலோகிராம் 590 கிராம் என நடைமுறைச் சாத்தியமற்ற மற்றும் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.				
13.	முப்படைகளின் அங்கத்தவர்களுக்கு உணவு வழங்குவதற்குரிய கேட்பு மனுக்களை மதிப்பீடு செய்யும் போது உணவுப் பொருட்களுக்காக நியாயமான விலையைத் திர்மானித்:து அந்த விலைகளின் மீது 10 சதவீதம் உச்ச அளவாகும் வகையில் நாட்டிலுள்ள	2023	அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த கிரயம் ஏற்படும் வகையில் மற்றும் உச்ச அளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	சமர்ப்பிக்கப்பட்டவிலை மனுவின் பெறுமதியின் அடிப்படையில் பெறுகைக்கான கட்டளை வழங்கப்படவில்லை மற்றும் விலைமனுதாரர்களுடன் பல சுற்று விலை பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு, சந்தை	இந்த நிலை 2024 ஆம் ஆண்டிலும் இருந்ததை அவதானிக்க முடிகிறது.

ஏதேனுமொரு முகாமிற்கு வழங்குவதற்கான உச்ச விலை, தீர்மானிக்கப்படுகின்றது எனவும் அதற்காக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தினால் சேகரிப்பட்ட விலைகள் தொடர்பான தரவுகளும் முப்படைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விலைப்பகுப்பாய்வும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது என காட்டப்பட்டிருந்தது எனினும் அடையாளங்காணப்பட்ட நியாயமான சந்தை விலையை விட 22 சதவீதத்திலிருந்து 103 சதவீதம் வரையான அதிக விலைக்கு கொழும்பு மற்றும் அண்மித்த பிரதேசங்களிலுள்ள 05 முகாம்களுக்கு அரிசி வகைகளை வழங்குவதற்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்தது டன் அந்த 05 முகாம்களுக்கான பருப்பு, கருவாடு மற்றும் பால்மாவினை வழங்குதல் அடையாளங்காணப்பட்ட நியாயமான சந்தை விலையினை விட 42 விலையை மையமாகக் கொண்டு அரசாங்கத்திற்கு குறைந்த செலவாக இருக்கும் நியாயமான விலை தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

	சதவீதத்திலிருந்து 102 சதவீதம் வரையான அதிக விலைக்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்தன.				
14.	நிதிபிரமாணம் 50 (ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகள் முடிந்தவரை முழுமையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டுமென்ற போதிலும், அடிப்படை ஏற்பாட்டில் 108 சதவீதம் முதல் 1503 சதவீதம் வரையிலான மேலதிக ஏற்பாட்டின் காரணமாக மதிப்பீடுகள் முழுமையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டமேலதிக ஏற்பாட்டில் அதிகமாகச் சேமிப்புகள் இருந்ததால் மற்றும் முழு ஏற்பாடுகளும் பயன்படுத்தப்படவில்லை.	2023	உச்ச அளவு வினைத்திறனுடன் ஒவ்வொரு செலவு விடயத்திற்குமாக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல் வேண்டும்.	2024 ஆம் ஆண்டில் நி.பி 66 மூலம் மாற்றப்பட்ட ஏற்பாடுகளை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் பெறுகை நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும், ஆகவே ஆண்டின் இறுதியில் எந்த ஏற்பாடும் காணப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சரின் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அதிகபட்ச உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும்.	இந்த நிலை கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து காணப்பட்டது.
15.	ஆயுத சேவைகளுக்கு இடையே ஒருங்கிணைந்த	2021	திட்டமிட்டதன் பிரகாரம் எதிர்பார்த்த இலக்குகள்	2022 ஆம் ஆண்டில் போதிய ஏற்பாடுகள்	கடந்த 8 ஆண்டுகளாக செயற்திட்டத்திற்காக செலவு

தந்திரோபாய தொடர்பை பராமரிக்கும் நோக்கத்துடன் தந்திரோபாய பாதுகாப்பு தகவல் தொடர்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாணம் 2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவுசெய்ய முன்மொழியப்பட்டது. நுண்ணலை வானொலித் தொடர்பாடல் முறைமையொன்றை கொள்வனவு செய்வதில் 06 வருட கால தாமதம் காரணமாக இந் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. அதன் பிரகாரம், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில், ரூபா. 600.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 11 தொடர்பாடல் கோபுரங்கள் மற்றும் 22 ஜெனரேட்டர்கள் அவற்றின் நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.	அடையப்பெறல் வேண்டும்.	இல்லாமையினாலும், தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் செலவினக் கட்டுப்பாடு இல்லாமையினாலும், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் எவ்வித ஏற்பாடுகளும் பெறப்படாமையினாலும் இந்தத் செயற்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. வானொலிகளின் மறு ஒலிபரப்புத் தேவைகளுக்காக ஜெனரேட்டர்கள் முப்படைகளாலும் சிறப்புப் படைகளாலும் பயன்படுத்தப்படுகின்றன. 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான கால நீடிப்புக்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	செய்த பணத்திற்கு போதியளவான திரும்பல்கள் கிடைக்கவில்லை.

16.	அமைச்சில் 28 சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகள் உட்பட 118 பதவிகளும், தேசிய கேடட் கார்ப்ஸில் கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் உட்பட 68 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.	2023/ 2021	எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்வதற்காக போதியளவு ஆளணியை பேணுதல் வேண்டும்.	பாதுகாப்பு அமைச்சில் தற்போதுள்ள சிரேஷ்ட மட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சுக்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தேசிய கேடட் கார்ப்ஸில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்நிலைமை அமைச்சின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு தடையாக அமைந்திருந்தது.
17.	முப்படைகளின் ஊழியர்களாக 700 அதிகாரிகள் மற்றும் ஏனைய தரவரிசை இராணுவ வீரர்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள ஏனைய பிரிவுகளின் கடமைகளுக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் அவர்களது ஊதியம் சம்பந்தப்பட்ட முப்படையினரால் ஏற்கப்பட்டது.	2022	தேவையான மற்றும் போதியளவான ஆளணியை பேணுதல் வேண்டும்.	2023 நவம்பர் 28 அன்று நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுவில் முப்படையினரையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான சட்டப் பின்னணியை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.	2023 நவம்பர் 28 அன்று நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுவில் முப்படையினரையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான சட்டப் பின்னணியை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

18.	2021 திசெம்பர் 21 ஆந் திகதிய 03.̓.2021 ஆம் இலக்க பாதீட்டு சுற்றிக்கை மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03.̓.2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் அரசாங்க செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் பணத்தை செலவு செய்யும் போது சிக்கனமற்று நடவடிக்கைகள் எடுத்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது என்பது தெரிவுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. • உணவுச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் உள்ளடங்கலாக முப்படைகளின் அதிகாரிகளின் ஒரு நாள் மாநாட்டிற்காக ரூபா.5,197,413 செலவுசெய்யப்பட்டது. • பாடநெறியில் பங்குபற்றிய 31 எண்ணிக்கையான	2022	செலவுகளை மேற்கொள்ளும் போது சிக்கனமாக ஆக்கபூர்வமாக மற்றும் வினைத்திறனாக நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவிலும் சிறப்பான விளைவினை பெற்றுக்கொள்ளும் வகையிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	01 கி.மீ தூரத்தினை கொண்ட கட்டிடமொன்று 2024 ஆம் ஆண்டு வாடகை அடிப்படையில் ரூபா.2,876,500 மாதாந்த வாடகையுடன் போக்குவரத்து மற்றும் தங்குமிட செலவுகளை குறைத்துக் கொள்ளுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில், அரசு காணியினை சுவீகரித்து, புதிய கட்டடமொன்ற நிர்மாணம் செய்வதற்கு சர்வதேச ஆதரவை பெறுவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.	போதிய செலவுக் கட்டுப்பாடு காணப்படவில்லை.

உத்தியோகத்தர் களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக 24 அலகுகளைக் கொண்ட வீட்டுத் தொகுதியானது ரூபா. 72 மில்லியனுக்கு வாடகைக்கு பெறப்பட்டதுடன், மாதாந்த வாடகையாக ரூபா. 3,000,000 செலுத்தப்பட்டிரு ந்தது.

- காரணமாக 03 மாதங்களாக உபயோகமற்றதா க காணப்பட்ட வீட்டு கட்டிடத் தொகுதியின் வாடகைக்காக ரூபா 10,500,000 சிக்கனமற்ற செலவொன்று மேற்கொள்ளப்பட் டிருந்தது.

- விரிவுரையாளர் கொடுப்பனவுகளா க ரூபா. 2,322,261 கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், போக்குவரத்து வசதிகளுக்காகவு ம் வாகன வாடகை மற்றும் எரிபொருள் செலவுகளுக்காக வும் ரூபா. 2,756,383 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள

3.10 நீதி அமைச்சு

	மொத்த சொத்துக்கள் (ரூபா.)	மொத்த பொறுப்புகள் (ரூபா.)	உரிமை (ரூபா.)	இலாபம் / மிகை / (நட்டம்) / (பற்றாக்குறை) (ரூபா.)	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	2,114,316,272	41,235,577	2,073,080,695	-	**முனைப்பழியுள்ள்**
2022	4,520,790,254	101,598,722	4,419,191,532	-	**முனைப்பழியுள்ள**
2023	5,097,297,958	171,927,248	4,925,370,710	-	**முனைப்பழியுள்ள**

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை
1.	2018 சனவரி 24 ஆந் திகதிய 5/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 5/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள்/ சேவை நாடுனர் நியதிச்சட்டம் தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டி ருக்கவில்லை.	2023	தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பிரசைகள் / சேவை நாடுனர் நியதிச்சட்டத்தின முறைப்படியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதனை அமுல்ப்படுத்துவது தொடர்பான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டிற்காக ஒரு நடைமுறை தயாரிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் அதனை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.	பிரசைகள் / சேவை நாடுனர் பட்டயம் வரைவு செய்யப்படுகிறது.

2. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மழைநீரின் மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 3000 முறைமைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 100 மில்லியன் இந்திய அரசாங்கத்தின் மானியம் மற்றும் ரூபா 20 மில்லியன் வெளிநாட்டு மானியத்தை நிதியளிப்பதற்கான நிதி ஏற்பாடானது செயற்திட்டத்தின் காலத்தை நீடிக்காமையால் அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்ததன் மூலம் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.	2023	திட்டமிட்ட செயற்பாடுகளை உரிய முறைப்படி அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உரிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலத்தை நீடிப்பதற்காக இந்திய தூதவராலயம் இணக்கத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன் அது தொடர்பான வரைபுக் கடிதம் வெளி விவகார அமைச்சினூடாக இந்த அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. உரிய நடவடிக்கைகளை நிர்ணயித்ததன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அந்த அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு செயற்திட்டத்தின் மேலதிக நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.	இத்திட்டத்திற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், இரு தரப்பினருக்கும் இடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், அமைச்சின் விடயத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, இந்த அலுவலகம் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் புதிய அமைச்சுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள

					எதிர்பார்ப்பதாக சம்பந்தப்பட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.
3.	நீதி வழங்கல் செயல்முறையை வலுப்படுத்த அமைச்சரவையின் CP/20/1400/330/013 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் ஒரு சிறப்புப் பிரிவு நிறுவப்பட்டது, இருப்பினும் ரூபா. 7,238,875 தொகையானது சிவில் சட்டத்தின் சீர்திருத்தத்திற்காக நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களுக்கு 2022 வரை செலுத்தப்பட்டது, இது அதன் சிறப்புப் பணிகளில் ஒன்றாகும், அதன் செயல்முன்னேற்ற அறிக்கைகள் முறையாக கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா.5,000,000 என்ற இந்த ஏற்பாட்டின் கீழான செலவு ரூபா.78,158 ஆகும். இந்த செலவினத்திற்குள், 03 தற்காலிக சாரதிகளுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகள், நாளாந்த சம்பள	2023 2022	திட்டமிடப்பட்ட பணிகளை முறையாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	சிவில் சட்ட சீர்திருத்தக் குழுவின் அறிக்கைகள் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்டதால், ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்றும், 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டம் செயல்படுத்தப்படாவிட்டாலும், 2022 ஆம் ஆண்டில் அந்த செயற்திட்டத்திற்கான செலவுகள் அந்த திட்டத்திற்கான செலவு உருப்படி 110-01-02-08-2509 இல் பற்று வைக்கப்பட்டுள்ளது.	முன்னர் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் முன்வந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், குழுவால் முன்மொழியப்பட்ட சிவில் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

	செலவுகள் மற்றும் மொழி பெயர்ப்பு கொடுப்பனவுகள் என ரூபா.72,379 செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நீதி வழங்கல் செயல்முறையை வலுப்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.				
4.	நீதி அமைச்சினால் பயன்படுத்துகின்ற நுவரொலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள 0.2023 ஹெக்டயர் காணி, இறக்குவானை சுற்றுலா விடுதி அமைந்துள்ள 01 ரூட் 10 பேச்சர்ஸ் காணி, பத்தரமுல்லை சிறுவர் நீதவான் நீதி மன்றம் அமைந்துள்ள 0.1760 ஹெக்டயர் காணி, நீதி இல்லத்தினை நிர்மாணிக்கும் கம்பனிக்குச் சொந்தமான 2.4281 ஹெக்டயர் (06 ஏக்கர்) காணி என்பவற்றை பெற்றுப்பேற்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்காத துடன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில் லை.	2023 2022 2021	காணிகளை துரிதமாக பொறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நுவரெலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியை அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு காணி ஆணையாளர் நாயகத்திற்கும், இறக்குவானை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியை பொறுப்பேற்பதற்கு நில அளவை நடவடிக்கைகளுக் காக நில அளவை அத்தியட்சகருக்கு ம், பத்தமுல்லை நீதவான் நீதிமன்றம் அமைந்துள்ள காணியை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கா க கடுவெல பிரதேச செயலகத்திற்கும் தெரியப்படுத்தப்பட் டுள்ளது. நீதி இல்லத்தினை நிர்மாணிக்கும் BCC லங்கா கம்பனிக்குச் சொந்தமான	நுவரெலியா சுற்றுலா பங்களா அமைந்துள்ள காணியை உடனடியாக அமைச்சிடம் ஒப்படைக்குமா று காணி ஆணையாளர் நாயகத்திடம் 04.07.2024 அன்று மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட் டிருந்தது. ரக்வான சுற்றுப் பங்களா அமைந்துள்ள காணியை மாற்றுவதற்கா ன அளவீட்டு பணிகளை இலவசமாக மேற்கொள்ளு மாறு நில அளவையாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளதாகவும், அதற்கான

காணியை பெற்றுக்கொள்வதற்கான இழப்பீட்டு பணம் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்படைக்கும் காலப்பகுதி தொடர்பாக எதிர்காலத்தில் தெரிவிக்கப்படும் என பிரதேச செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பத்தரமுல்லை சிறுவர் நீதவான் நீதிமன்றம் அமைந்துள்ள காணியை நீதியமைச்சிற்கு மாற்றுமாறு 2024.06.13 அன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு கடுவெல பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் அதிகாரசபை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகார பியச நிர்மாணிக்கப்பட்டு வரும் பி.சி.சி லங்கா நிறுவனத்திற்கு சொந்தமான காணியை நட்டஈடு செலுத்தாமல் இடமாற்ற சான்றிதழின் மூலம் இந்த அமைச்சுக்கு மாற்றுவதற்கா

					ன காலக்கெடு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.
5.	நிதிப்பிரமாணம் 880 இற்கு இணங்க மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டம் மற்றும் நீதி அமைச்சின் 2011 சனவரி 18 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய பத்து உத்தியோகத்தர்கள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிணை வைத்திருக்கவில்லை.	2023 2022	தொடர்புபட்ட நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தற்பொழுது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி இதுவரை கிடைக்கப்பெறாததால் நினைவூட்டல் விடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.
6.	இணக்க சபையின் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் இணக்க சபையை நியமிப்பதற்கு 04 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. பல இணக்க சபைகளின் அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடைந்திருந்தும் புதிய நியமனங்களுக்காக அறிவித்தலினை வெளியிடுதல் (வர்த்தமானி அறிவித்தல்) தாமதமடைந்ததனால் அங்கத்தவர்களை நியமிக்கும்	2023	பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் துரிதமாக நியமனங்கள் செய்யப்படுதல் வேண்டும்.	நியமனங்கள் வழங்கும் போது இடம்பெறுகின்ற தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு தற்பொழுது இணக்கசபை பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலுக்காக அனுப்பிவைத்தல் இடம்பெற்று வருவதுடன் அது பதவிக் காலம் முடிவடையும் திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு முன்னர் இடம்பெறுகின்றது	நியமனங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக தற்போது இணக்க சபைகளின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே வர்த்தமானி அறிவித்தல் பரிந்துரைக்கப்பட்டு, பதவிக்காலம் முடிவதற்கு 6 மாதங்களுக்கு

